# THE KOVAI HERALD

தி கோவை ஹெரால்டு

RNI.Regn.No.TNBIL/2018/76255 | Postal No: CB/154/2024-26 | Kovai / Tirupur | thekovaiherald.co.in | facebook.com/Thekovaiherald

Volume 8 | Issue 41 | English & Tamil Weekly | 15.3.2026 SUNDAY | 8 Pages | Price Rs.5/-



## ROYAL CARE HOSPITALS

making life better

H-2022-0901 | IHCO-60010614 | 1A0D86A | 2025-28

# 1st in India

(Philips Azurion R3 Biplane Cath Lab)

The revolution in Interventional Radiology is here for your best treatment



**Dr. K. Madeswaran**
Chairman



- ClarityIQ Radiation Reduction
- On-Table Helical CT (Smart CT)
- 3D Vessel Navigation
- EmboGuide (Tumor Feeding)
- Advanced Neuro Suite
- Bolus Chase for Peripheral Angio
- Reduced Contrast Load
- Future-Ready Integration
- Philips Remote Service (PRS)

"Precise cardio and neuro intervention for better outcomes from heart attack and stroke."

## Royalcare Super Speciality Hospital Limited

No:1/520, Neelambur, Sulur Taluk, Coimbatore - 641 062, Tamilnadu. INDIA

Ph: 0422-222 7000, 311 7000, Web: www.royalcarehospitals.in

# Classical Music- Reverberation of the Existence

THE KOVAI HERALD

Sadhguru,
Isha Foundation



What is sound? If you feed any sound into an oscilloscope a sound measuring instrument depending upon its frequency and amplitude, a form is created. That means every sound has a form attached to it. Similarly, every form has a sound attached to it. Or in other words, today modern science is proving to you that the whole existence is just a vibration of energy. Just sixty to seventy years ago, modern science believed in matter, but not anymore. Today, science has gone a full circle and now science itself denies matter. Science says there is no such thing as matter it is just a make-believe thing. The reality is just that the whole existence is a vibration.

Where there is a vibration there is bound to be a sound. So the whole existence is a complex amalgamation of sounds. If you have the ears to hear, the whole existence is just music because the whole existence is just a reverberation. In Indian classical music, the way sound is used the ragas, the tunes, everything is such that if you get deeply involved in this, it will bring meditativeness. This is the way this culture was created. Every single act that you perform was aimed only at elevating your consciousness. For a very long time, when people mentioned the word "India," they always saw it as a possibility because India has been the greatest experiment on the planet, in terms of making a whole culture, a whole nation into a spiritual process. Once you are born in this land, you may do many things you may pursue your careers, you may build your families and many other aspects of life, but essentially, your life is basically about you attaining to the highest liberation. Mukti is the only goal.

So in this culture, music, dance or whatever else you did was not entertainment, it was also a spiritual process. Entertainment was not the attitude in life. Everything was a sadhana to reach a higher level of consciousness. Everything, just sitting, standing, and eating was also sadhana. Indian classical dance is not just entertainment. If you use the postures and the mudras properly, it will lead to meditativeness. Similarly, if you see a person who is very deeply involved in classical music, he will be saint-like. Music was not some "jing-bang" that somebody invented just for entertainment. For one who listens the right way, everything is music. For one who does not perceive the wholeness of the sound, it is noise because he is hearing in bits and pieces. One who listens to the wholeness of the existence, for him everything is music; there is nothing which is not music. The very body is rever berating with wonderful music, if you listen.

## Royal Care Hospital Facilitates

# Organ Donation of 5-Year Old, Saves Four Lives



THE KOVAI HERALD

A five-year-old boy from Udumalpet, who was declared brain dead following a road accident, gave a new lease of life to four patients through organ donation at Royal Care Super Speciality Hospital in Coimbatore.

The donor was identified as V.Sivadhitya (5) son of S.Vignesh from Udumalpet in Tiruppur district. Sivadhitya and his grandfather were recently involved in a road traffic accident and were rushed to Royal Care Super Speciality Hospital for treatment.

Despite receiving intensive medical care, the boy did not respond to treatment and was declared brain dead. In a noble gesture, Sivadhitya's parents agreed to donate their son's organs. Following the guidelines of the Transplant Authority of Tamil Nadu, a team of multi-organ transplant surgeons harvested the liver, kidneys, and heart from the deceased child.

According to hospital sources, one kidney was allotted to Royal Care Super Speciality Hospital by the Transplant Authority of Tamil Nadu and was successfully transplanted into a patient in need. The other kidney, along with the liver and heart, was sent to private hospitals in Salem and Chennai for transplantation.


The management of Royal Care Super Speciality Hospital praised the parents for their courageous and compassionate decision, stating that their noble act has helped save multiple lives and stands as an inspiring example of humanity.

*Liver, kidneys, and heart of Five year old Sivadhitya sent to various hospitals to save four lives.*




# GKNM Hospital Organizes Kidney Health Awareness Program on World Kidney Day

THE KOVAI HERALD



Dr.Anurega Selvaraj, Consultant Paediatric Nephrology, Dr. Ramachandran, Consultant Nephrology, Dr.Jayaprakash, Consultant Nephrology, Dr.Manjunath, Associate Consultant Urology, Dr.Raghavendra, Medical Director-iOP at the Kidney Health Awareness programme held at GKNM iOP Outpatient Centre

G.Kuppuswamy Naidu Memorial (GKNM) Hospital, a pioneer in kidney treatment for both children and adults, organized a Kidney Health Awareness Activity to commemorate World Kidney Day. The event was held at the GKNM iOP Outpatient Centre, where experts from multiple specialties — Nephrology and Urology — interacted with students of BVM Global School.

Over 150 students and teachers participated in the program. The program was led by Dr. Raghavendra, Medical Director iOP, alongside a team of specialists including Adult Nephrologists Dr. Ramachandran and Dr. Jayaprakash, Paediatric Nephrologist Dr. Anurega Selvaraj, and Urologist Dr. Manjunath.

As part of its broader commitment to community health, GKNM Hospital has launched the "School Health Partnership Program".

This initiative focuses on First aid training and emergency care, Regular school health checkups, Health talks and awareness sessions, Student engagement on World Health Days

Through this program, GKNM Hospital aims to position itself as a "School Health Partner", promoting pediatric health and super-specialty services, while becoming the trusted Family Hospital for the community.

# Sri Ramakrishna Polytechnic College celebrates its 30th Annual Day

THE KOVAI HERALD




Sri Ramakrishna Polytechnic College, Coimbatore celebrated its 30th Annual Day at the college auditorium.

Principal Dr. D.Gopalakrishnan welcomed the gathering and presented the annual report highlighting the achievements of the academic year 20252026. The college magazine was released by Dr. Sundar Ramakrishnan, Managing Trustee of SNR Sons Charitable Trust, who also presided over the function. The chief guest, T. Koushik Kumar, Head Site Planning, Alstom Transport India Limited, Coimbatore, encouraged students to focus on hard work, technical skills, and innovative thinking.

During the event, prizes were distributed to meritorious students. N. Harshitha (Computer Engineering) received the Best SportsWoman award, while K. Siranjan (Mechanical Engineering) was named Best Sports Man. S. Dharshan (Civil Engineering) received the V. Rajayalakshmi Memorial Award as the Overall Best Outgoing Student. The programme concluded with a vote of thanks by S.Karthick, Head of the Communication and Computer Networking Department.

# Amrita University's Ocean Farming Initiative Wins Global Award at Sustainability Summit



THE KOVAI HERALD

Amrita Vishwa Vidyapeetham has been honoured at the World Sustainable Development Summit 2026 held in New Delhi, where its innovative ocean farming initiative "Blue is the New Pink" received the SGP Best Innovator Award.

The recognition was conferred under the Global Environment Facility Small Grants Programme, which supports community-based environmental initiatives worldwide. The project focuses on women-led climate action and sustainable livelihoods in coastal communities.

The initiative is implemented by the Center for Women's Empowerment and Gender Equality (CWEGE) at Amrita University, a research centre that has held the **UNESCO Chair since 2016. The award was received by Bhavani Rao R., Project Director, at a ceremony held at the Taj Palace New Delhi. Project members said the guidance of Amrita University Chancellor Mata Amritanandamayi Devi and the leadership of Dr. Bhavani Rao, were key to the initiative's success.

# Surana & Surana International Attorneys inaugurates of its new branch office




THE KOVAI HERALD

Surana & Surana International Attorneys marked a significant milestone with the inauguration of its new branch office in Coimbatore.

The firm's Managing Partner & CEO, Dr. Vinod Surana, KarthiKeyan Mounaguruswamy, President of CODISSIA, Rajesh Lund, President of the Indian Chamber of Commerce and Industry, Ravi Chandran, Managing Director of Krish Carbon, were present on the launch of Surana and Surana of the Coimbatore office.

To mark the occasion, the firm released three handbooks on Intellectual Property Rights (IPR), MSMEs, and Business Families, underscoring its thought leadership and expertise in these areas. The event also featured two high-impact panel discussions focusing on the evolving role and challenges of business families in India's growth journey.

The programme concluded with an engaging Q&A session followed by a networking lunch, reaffirming the firm's commitment to fostering meaningful dialogue and strengthening the broader business ecosystem.

FOR NEWS Publication
9244317182
04223147962

# The Eye Foundation observes World Glaucoma Week from March 08 to 14



The Eye Foundation Group of Hospitals is observing World Glaucoma Week from March 8 to 14, 2026, as part of a global initiative led by the World Glaucoma Association (WGA) to raise awareness about glaucoma and promote early detection to prevent irreversible vision loss.

As part of the World Glaucoma Week observance, The Eye Foundation is conducting awareness programmes and screening initiatives across all its centres. From March 8 to 14, 2026, the hospital is offering free glaucoma consultation for patients at all its branches. In addition, patients will receive a 10% discount on glaucoma investigations and surgical procedures, and a 50% concession on glaucoma consultation for blood relatives. Dr. R. Chitra, Medical Director & Consultant Glaucoma, Cataract and Refractive Surgery Services, along with Dr. Muralidhar R., Dr. Aiman Ahmed Khan and Dr. Nirajana Balasubramaniam, emphasized the importance of regular glaucoma screening. To mark World Glaucoma Week, The Eye Foundation invites the public to undergo free glaucoma screening from March 8 to 14, 2026. For more information or to book an appointment, contact the Glaucoma Helpline: 94422 17796 / 0422 4242000.

## Nehru Group of Institutions organizes the NGI Shiv Khera Connect: Leadership Empowerment Summit

Nehru Group of Institutions (NGI), Tamil Nadu, in association with Rotary International's Rotary Disha 2026, organized the NGI Shiv Khera Connect: Leadership Empowerment Summit 2026, inspiring students with leadership and motivational insights. The programme began with a welcome address by B. Anirudhan, Registrar of P. K. Das University. P. Krishnakumar, CEO and Secretary of NGI, delivered the presidential address highlighting the institution's vision of nurturing responsible leaders. K. A. Kuriachan, Governor of Rotary International and international motivational speaker, delivered a special address on leadership and social responsibility.

Later, H. N. Nagaraja, Executive Director of NGI, felicitated Shiv Khera.

The Outstanding Talent of NGI Award was presented to 11 students from various NGI institutions for excellence in academics, leadership, and innovation. The programme concluded with a vote of thanks by P. R. Balaji, Dean, NCAAS.

# ‘குழந்தை முதல் பாட்டி வரை பாதுகாப்பு இல்லை’

## தொண்டாமுத்தூரில் எஸ்.பி.வேலுமணி பேச்சு





கோவை குனியமுத்தூரில் பாஜக சார்பில் தெருமுனை பிரச்சாரத்தில் முன்னாள் அமைச்சர் எஸ்.பி.வேலுமணியின் கையை பிடித்து உற்சாகமாக உயர்த்திய அண்ணாமலை.

கோவைதொண்டாமுத்தூரில் நடைபெற்ற தெருமுனை பிரச்சார பொதுக் கூட்டத்தில் பேசிய பாஜக முன்னாள் தலைவர் அண்ணாமலை, திமுக ஆட்சியில் பாலியல் வன்கொடுமைசம்பவங்கள் அதிகரித்துள்ளதாக தெரிவித்தார்.

பாரதிய ஜனதா கட்சி சார்பில் ‘நாளை நமதே தமிழ்நாடும் நமதே’ என்ற தலைப்பில் தெருமுனை பிரசாரக் கூட்டம் நடந்தது. பாஜக தெற்கு மாவட்ட சந்திரசேகர் வரவேற்றார்.

பாஜக முன்னாள் தலைவர் அண்ணாமலை தலைமை தாங்கினார்.

கூட்டத்தில்சிறப்புவிருந்தினராக **முன்னாள் அமைச்சர் எஸ்.பி. வேலுமணி** கலந்து கொண்டுபேசியதாவது, ‘‘திமுக இதுவரை எந்த திட்டமும் கொண்டு வரவில்லை. திமுகவினர் ஒருதிட்டமாவது, கொண்டு வந்திருந்தால், மேடை போட்டு வெளிப்படையாக பேசுவோம். திமுக ஆட்சியில் யாருக்கும் பாதுகாப்பு இல்லை. 18 வயது பெண் முதல் பாட்டி வரை பெண்களுக்கு பாதுகாப்பு இல்லை. திமுக ஆட்சியின் அவலநிலை குறித்து அண்ணாமலை உங்களிடத்தில் விரிவாக பேசுவார். இவ்வாறு அவர் பேசினார்.

நிகழ்ச்சியில் **அண்ணாமலை பேசுகையில்**,“தேசிய ஜனநாயக கூட்டணி ஆட்சி அமைந்ததும் ஒவ்வொரு பெண்களுக்கும் வங்கி கணக்கில் ரூ.10,000 வர உள்ளது.

திமுக மீண்டும் ஆட்சிக்கு வரக்கூடாது என மக்கள் தீர்மானம் செய்துகொள்ளவேண்டும். திமுக ஆட்சியில் யாருக்குமே பாதுகாப்பே இல்லாத சூழ்நிலை உருவாகியுள்ளது. சட்டம், ஒழுங்கை சீரழித்த திமுக ஆட்சியை தூக்கி எறிய வேண்டும். திமுக ஆட்சி மீண்டும் வரவே கூடாது என்பதில்மக்கள்தீர்க்கமாக இருக்கவேண்டும்.அதிமுக ஆட்சிக்கு வரவேண்டும். மத்திய அரசு திட்டங்கள் மக்களை சென்றடைய வேண்டும்.

கோவையில் தேசிய ஜனநாயககூட்டணிவெற்றி பெற்ற ஒரே காரணத்தால், கொரோனா தடுப்பூசியை குறைத்துகொடுத்துதனது மோசமான அரசியலை செய்தது திமுக. அதை கோவை மக்கள் மறந்து விடமாட்டார்கள்.இம்முறையும்,கோவையில்திமுகவை விரட்டியடிக்க மக்கள் தயாராக இருக்கிறார்கள். மத்தியபாஜகஅரசுதமிழக மக்களுக்கு பல்வேறு நலத்திட்டங்களை வழங்கி வருகிறது. ஆனால், திமுக அரசியல் காழ்ப்புணர்ச்சி காரணமாக மத்திய அரசு திட்டங்களை தடுத்து வருகிறது.

மத்திய, மாநில அரசுகள் இணைந்து செயல்பட்டால் வளர்ச்சி அடைந்த தமிழகத்தை உறுதியோடு நம்மால் உருவாக்க முடியும். வருகிற தேர்தலில் தேசிய ஜனநாயக கூட்டணியின் ஆட்சி அமைய வேண்டும். பலமான, வளர்ச்சி அடைந்த தமிழகம் நமது தேசியஜனநாயககூட்டணி அரசால்உருவாக்கப்படும்.

இவ்வாறு அண்ணாமலை பேசினார்.

நிகழ்ச்சியில் பகுதி செயலாளர் மதன், பாஜக முன்னாள் மாவட்ட தலைவர் வசந்தராஜன், திமுக மாவட்ட இணை செயலாளர்மணிமேகலை, சுண்டக்காமுத்தூர் பகுதி தலைவர் செல்வராஜ், குனியமுத்தூர் பகுதியின் தலைவர் மதனகோபால் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.


# அட்லாண்டிக் கடலில் பரவும் பெரும் கடல்பாசி

## விஞ்ஞானிகள் எச்சரிக்கை

அட்லாண்டிக்பெருங்கடல்பகுதியில்‘கிரேட் சர்காசம் பெல்ட்’ எனப்படும்பிரம்மாண்டமான கடல்பாசிப் படலம் வேகமாக பரவி வருவதாக விஞ்ஞானிகள் எச்சரிக்கை விடுத்துள்ளனர். சுமார் 5,500 மைல்கள் நீளத்திற்கு பரந்துள்ள இந்தப் பாசிப்படலம் விண்வெளியில் இருந்து பார்க்கும்போது பழுப்பு நிறப் பாம்பு போலத் தோன்றுகிறது. ஆப்பிரிக்கா கடற்கரையிலிருந்து மெக்சிகோ வளைகுடா வரை இது பரவி இருப்பதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

புளோரிடா அட்லாண்டிக் பல்கலைக்கழகம் மேற்கொண்ட ஆய்வின்படி, கடந்த 2011-ஆம் ஆண்டில் இந்த கடல்பாசிப் படலத்தின் வளர்ச்சி முதன்முதலில் கண்டறியப்பட்டது. ஆனால் தற்போது அதன் அளவு வேகமாக அதிகரித்து வருகி றது. கடந்த ஆண்டு மே மாதத்தில்மட்டும்சுமார் 3.75 கோடி மெட்ரிக் டன் கடல்பாசி கட லில் மிதந்ததாக விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

விவசாயத்தில் பயன்படுத்தப்படும் நைட்ரஜன், பாஸ்பரஸ் போன்ற ஊட்டச்சத்துகள் ஆறுகள் வழியாக கடலில் கலப்பதே இதற்குக் காரணம் என கூறப்படுகிறது. குறிப்பாக அமேசான் நதி வழியாக கடலுக்கு வரும் ஊட்டச்சத்துக்கள் பாசிகளின் வளர்ச்சியை வேகப்படுத்துகின்றன. இந்த கடல்பாசி கடற்கரையை அடைந்தபிறகு நச்சுவாயுக்கள் வெளியிட்டு மனிதர்களின் உடல்நலத்திற்கும் கடல்வாழ் உயிரினங்களுக்கும் ஆபத்தை ஏற்படுத்தும் வாய்ப்பு இருப்பதாகவும் விஞ்ஞானிகள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.



# கோவை மேற்கு புறவழிச்சாலை முதல் கட்டம் திறப்பு

தி கோவை ஹெரால்டு




கோவை நகரின் போக்குவரத்து நெரிசலை குறைக்கும் முக்கிய திட்டமாக அமைந்துள்ள மேற்கு புறவழிச்சாலை திட்டத்தின் முதல் கட்டம் இன்று மக்கள்பயன்பாட்டிற்குதிறக்கப் பட்டது. தமிழ்நாடு முதல்வர் மு.க. ஸ்டாலின் இந்தச் சாலையை அதிகாரப்பூர்வமாக திறந்து வைத்தார்.

மயில்கல் முதல் மாதம் பட்டி வரை சுமார் 11 கிலோ மீட்டர் நீளத்தில் அமைந்துள்ள இந்தப் புதிய சாலை, கோவை நகரின் மேற்குப் பகுதிகளில் போக்குவரத்தை எளிதாக்கும் வகையில் உருவாக்கப்பட்டுள்ளது. இதுவரை மயில்கல் பகுதியில்இருந்துமதுக்கரை செல்ல குறுகிய சாலைகள் மற்றும் போக்குவரத்து நெரிசல் காரணமாக 40 முதல் 45 நிமிடங்கள் வரை எடுத்துக்கொண்டது. ஆனால் புதிய புறவழிச் சாலை தொடங்கியதால் இந்தப் பயணம் தற்போது 10 முதல் 15 நிமிடங்களில் முடியும் என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இந்தச் சாலை தொடங்கப்பட்டதன் மூலம் பாலக்காடு சாலை மற்றும் மேட்டுப்பாளையம் சாலை வழியாக வரும் கனரக வாகனங்கள் இனி நகருக்குள் நுழையாமல் நேரடியாக புறவழிச்சாலையை பயன்படுத்த முடியும்.

இதனால் அவிநாசி சாலை, திருச்சி சாலை உள்ளிட்ட முக்கிய சாலைகளில்போக்குவரத்து நெரிசல் குறையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

மேலும், கோவையின் மேற்குப் பகுதிகளில் உள்ள விவசாய நிலங்கள் மற்றும் சிறு தொழில் நிறுவனங்களுக்கு இந்தச் சாலை பயனுள்ளதாக இருக்கும். விவசாய விளைபொருட்களை சந்தைகளுக்கு விரைவாக கொண்டு செல்லும் வசதி கிடைக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. சிக்னல்களில் நீண்ட நேரம் வாகனங்கள் காத்திருக்க வேண்டிய நிலை குறைவதால் எரிபொருள் செலவும் காற்று மாசும் குறையும் என்று கூறப்படுகிறது.

மொத்தம் 32.43 கிலோமீட்டர் நீளத்தில் அமைக்கப்படும் இந்த மேற்கு புறவழிச்சாலை திட்டம்மூன்றுகட்டங்களாக செயல்படுத்தப்படுகிறது. தற்போதுதிறக்கப்பட்டுள்ள முதல் கட்டம் மயில்கல் முதல் மாதம்பட்டி வரை 11.8 கிலோமீட்டர் தூரத்தில் அமைந்துள்ளது. இந்தப் பகுதியில் மதுக்கரை, சுண்டக்காமுத்தூர், பேரூர் செட்டிபாளையம், தீத்திபாளையம் போன்ற பகுதிகள் இணைக்கப்பட்டுள்ளன.

இரண்டாம் கட்டத்தில் மாதம்பட்டி முதல் சோமையம்பாளையம் வரை சுமார் 12 கிலோமீட்டர் தூரத்தில் சாலை அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது. மூன்றாம் கட்டமாக சோமையம்பாளையம் முதல் நரசிம்மநாயக்கன் பாளையம் வரை சுமார் 8.5 கிலோமீட்டர் நீளத்தில் சாலை அமைக்கப்பட உள்ளது.

இந்த முழுத் திட்டம் நிறைவடைந்த பிறகு பாலக்காடு திசையிலிருந்து ஊட்டி மற்றும் மேட்டுப்பாளையம் நோக்கிச் செல்லும் வாகனங்கள் கோவை நகருக்குள் நுழையாமல் நேரடியாக பயணிக்க முடியும். இதன் மூலம் கோயம்புத்தூர் நகரின் போக்குவரத்து அமைப்பு மேலும் மேம்படும் என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

# உலமாக்களுக்கு இருசக்கர வாகன மானியம் உயர்வு: மாவட்ட ஆட்சியர் அறிவிப்பு



தமிழ்நாட்டில் பள்ளி வாசல்களில் பணியாற்றும் உலமாக்களுக்கு இரு சக்கர வாகனம் வாங்க வழங்கப்படும் மானியத் தொகையைஉயர்த்திதமிழ் நாடுஅரசு அறிவித்துள்ளது.

அதன்படி, உலமாக்கள் மற்றும் பணியாளர்கள் நல வாரியத்தில் பதிவுபெற்ற 18 முதல் 60 வயதுக்குட்பட்ட உலமாக்களுக்கு வழங்கப் படும் இருசக்கர வாகன மானியம் ரூ.25,000 இலிருந்து ரூ.50,000 ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

இந்தத் திட்டத்தின் கீழ் கோயம்புத்தூர் மாவட்டத்தில் உள்ள பள்ளிவாசல்களில் பணியாற்றும் பேஷ் இமாம்கள், ஆலிம்கள், அரபி ஆசிரியர்கள் மற்றும் ஆசிரியைகள் உள்ளிட்ட உலமாக்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

மானியம்பெறவிரும்பும் பயனாளிகள், கோயம் புத்தூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் இயங்கும் சிறுபான்மையினர் நல அலுவலகத்தில் இருந்து விண்ணப்பப் படிவத்தை பெற்றுக் கொண்டு, தேவையான ஆவணங்களுடன் விண்ணப்பிக்க வேண்டும். விண்ணப்பம் ஒப்புதல் பெறப்பட்ட பின்னரே பயனாளிகள் இருசக்கர வாகனத்தை வாங்க வேண்டும்.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை தேவையான ஆவணங்களுடன் கோயம்புத்தூர் மாவட்ட சிறுபான்மையினர் நல அலுவலகத்தில் சமர்ப்பிக்க வேண்டும் என்று மாவட்ட ஆட்சியர் பவன்குமார் தெரிவித்துள்ளார்.

# முதுகலை மாணவர்களுக்கு செமஸ்டருக்கு ரூ.60,000 உதவித்தொகை

## அண்ணா பல்கலைக்கழகம் அறிவிப்பு

தமிழகத்தில்உயர்கல்வி கற்கும் மாணவர்களை ஊக்குவிக்கும் வகையில் அண்ணாபல்கலைக்கழகம் புதியகல்விஉதவித்தொகை திட்டத்தைஅறிவித்துள்ளது. இந்த திட்டம் 202627 கல்வியாண்டு முதல் அமலுக்கு வர உள்ளது.

இதன் கீழ் முதுகலை படிப்புகளில் சேரும் மாணவர்களுக்கு ஒரு செமஸ்டருக்கு ரூ.60,000 வழங்கப்படும். இது மாதந்தோறும் சுமார் ரூ.12,400 பெறுவதற்கு சமமானதாகும். இரண்டு ஆண்டுமுதுகலைபடிப்பை முடிக்கும் வரை இந்த நிதி உதவி தொடர்ந்து வழங்கப்படும்.

முதற்கட்டமாக தகுதியான400மாணவர்கள் இந்த உதவித்தொகை பெறத் தேர்ந்தெடுக்கப்பட உள்ளனர். திறமையான மாணவர்கள் பண நெருக்கடியால் உயர்கல்வியை தொடர முடியாமல் போகாத வகையில் இந்த திட்டம் அறிமுகப்படுத்தப் பட்டுள்ளது. மேலும் ஆய்வுப் படிப்புகளில் மாணவர்கள் அதிகமாக ஈடுபட வேண்டும் என்பதும் இதன் நோக்கமாகும்.

அண்ணாபல்கலைக்கழகத்தில் அறிமுகப்படுத்தப் பட்டுள்ள இந்த திட்டத்தை தமிழகத்தில் உள்ள அரசு பொறியியல் கல்லூரிகளுக்கும் விரிவுபடுத்த தொழில்நுட்பகல்விஇயக்குநரகம்திட்டமிட்டுவருகிறது. இதன் மூலம் கிராமப்புற மற்றும் பொருளாதார ரீதியாக பின்தங்கிய மாணவர்களுக்கு முதுகலை கல்வி கற்கும் வாய்ப்பு அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# சட்டமன்ற தேர்தலில் திமுகவுக்கு ஆதரவு பெரியார் திராவிட கழகம் தீர்மானம்

தந்தைபெரியார்திராவிடக்கழகத்தின்மாநிலசெயற்குழு கூட்டம்கோவைகாந்திரபுரம் பெரியார் படிப்பகத்தில்பொது செயலாளர் ராமகிருட்டி ணன் தலைமையில் நடை பெற்றது. ஏராளமான தொண்டர்கள் இதில், பங்கேற்றனர்.

கூட்டத்தில் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் நல்லக் கண்ணுவின் மறை வுக்கு இரங்கல் தெரிவிக்கப் பட்டது.

மேலும், 2026-ம் ஆண்டு சட்டமன்ற தேர்தலில் திமுக தலைமையிலான மதசார்பற்ற முற்போக்கு கூட்டணியை ஆதரிப்பது என ஒரு மனதாக முடி வெடுக் கப்பட்டது. தென்மாவட்டங் களில் சாதி மோதலை தடுக்க நடவடிக்கை எடுக்கவும் வலியுறுத்தப்பட்டது.

கோவையில் பெரியார் அறிவுலகம் திறந்த முதல்வர் ஸ்டாலினுக்கும் நன்றி தெரிவிக்கப்பட்டது. மேலும், சாதி பெயரில் இயங்கும் திருமண தகவல் மையங்களுக்கு தடை விதிக்க வேண்டு மென உள்பட பல்வேறு தீர்மானங்கள் நிறை வெற்றப்பட்டன.

# குழந்தைகளின் பாதுகாப்புக்காக வாட்ஸ் அப் புதிய வசதி

## பெற்றோர் கண்காணிப்பு அறிமுகம்

இன்றைய காலத்தில் உலகமே கைப்பேசிக்குள் அடங்கி விட்டது. தூங்குவதற்கு முன்பும், தூங்கி எழுந்த உடனேயும் பலர் கைப்பேசியை எடுத்து செய்திகளைப் பார்ப்பது வழக்கமாகி வருகிறது. குறிப்பாக சிறுவர்கள் சமூக வலைத்தளங்களை அதிகமாக பயன்படுத்துவதால், அவர்கள் யாருடன் தொடர்பில் உள்ளனர் என்ற கவலை பெற்றோரிடையே அதிகரித்து வருகிறது.

இந்த நிலையில், 13 வயதுக்குட்பட்ட குழந்தைகள் பயன்படுத்தும் கணக்குகளை பெற்றோர் எளிதாக கண்காணிக்க புதிய வசதியை வாட்ஸ் அப் அறிமுகப்படுத்தியுள்ளது.

“பெற்றோர் கட்டுப்பாடு” என்ற இந்த வசதியின் மூலம் குழந்தைகள் யாருடன் பேசுகிறார்கள், செயலியில் என்ன செய்கிறார்கள் என்பதைக் பெற்றோர் கவனிக்க முடியும்.

பல தரப்பினரிடமிருந்து வந்த ஆலோசனைகள் மற்றும் புகார்களின் அடிப்படையில் இந்த நடவடிக்கையை மெட்டா நிறுவனம் மேற்கொண்டுள்ளதாக தெரி விக்கப்பட்டுள்ளது.

# கே.என்.ஜி. புதூர் கோ.கேஸ் நிறுவனத்தில் ஒரே நாளில் ரூ.20 விலை உயர்வு: அதிர்ச்சியில் ஆட்டோ ஓட்டுநர்கள்

கோவை தடாகம் சாலையில், கேஎன்ஜிபுதூர்பகுதியில்கோகேஸ் நிறுவனத்திற்கு சொந்தமான பங்க் இயங்கி வருகிறது. இங்கு, ஆயிரக்கணக்கான டேக்ஸி ஒட்டுநர்கள், ஆட்டோ ஒட்டுநர்கள் இங்கு தங்களது வாகனங்களுக்கு எரிபொருள் நிரப்பி வருகின்றனர். தற்போது, வளைகுடா நாடுகளில் ஏற்பட்டுள்ள போர் காரணமாக, தமிழகத்தில் சிலிண்டர் எரிவாயு தட்டுபாடுஏற்பட்டுள்ளது. ஆனால், இந்த கேஸ் நிறுவனம் எந்த வித முன்னறிவிப்பும் இல்லாமல், விலையை உயர்த்தியுள்ளனர். மற்ற பங்க்குகளில் இன்றைக்கும் ஆட்டோ எல்பிஜி ஒரு லிட்டர் விலை 64.87-க்கு விற்பனையாகும் நிலையில் இங்கு மட்டும் 84.99 க்கு விற்பனை செய்யப்பகிறது. மற்ற பங்க்குகளை விட 20 ரூபாய்க்கும் மேல் லிட்டருக்கு கூடுதலாக விற்பனை செய்து வருகின்றனர். இது குறித்து வாகன ஓட்டிகள் ஊழியர்களிடம் கேட்ட போது, இஸ்டம் இருந்தால் அடியுங்கள், இல்லைஎன்றால் வெளியே செல்லுங்கள் என அலட்சியமாக கூறியுள்ளன.

இதனால் ஆத்திரமடைந்த கால் டாக்ஸி ஓட்டுனர்கள் ஆட்டோ ஓட்டுநர்கள் கேஸ் பங்கை முற்றுகையிட்டு போராட்டத்தில் ஈடுபட்டனர். பின்னர், செய்தியாளர்களிடம் பேசிய கால் டாக்ஸி ஓட்டுநர்கள் கூறியதாவது, எந்தவித முன்னறிவிப்பும் இல்லாமல் ஒரே நாளில் 20 ரூபாய்க்கு மேல் விலையை உயர்த்தியுள்ளனர். இதுகுறித்துகேள்விஎழுப்பினால் எந்தவித முறையான பதிலும் இல்லை.

விலை உயர்வுக்கான அறிவிப்புபலகையையும் எங்கும் வைக்கவில்லை. எனவே தமிழக அரசு உடன் உரிய நடவடிக்கை எடுத்து கால் டாக்ஸி மற்றும் ஆட்டோ ஓட்டுநர்களின் வாழ்வாதாரத்தை பாதுகாக்க வேண்டும் என்றனர்.

# ஐபிஎல் 2026: முதல் கட்ட அட்டவணை அறிவிப்பு

இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு வாரியம் 2026ஆம் ஆண்டுக்கான இந்தியன் பிரீமியர் லீக் (ஐபிஎல்)தொடரின்முதல்கட்ட அட்டவணையை அதிகாரப் பூர்வமாக அறிவித்துள்ளது. இந்த தொடர் மார்ச் 28 முதல் ஏப்ரல் 12 வரை நடைபெறும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்தியாவில் மூன்று மாநிலங்களில் சட்டமன்றத் தேர்தல்நடைபெறஉள்ளதால், முழு அட்டவணை தேர்தல் தேதிகள் அறிவிக்கப்பட்ட பின்னர் வெளியிடப்படும் என்றும் கூறப்பட்டுள்ளது.

19வது ஐபிஎல் தொடரின் தொடக்கப்போட்டியில்நடப்பு சாம்பியன்ராயல்சேலஞ்சர்ஸ் பெங்களூரு அணி சன்ரைசர்ஸ் ஹைதராபாத் அணியை எதிர்கொள்ளும் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்தப் போட்டி பெங்களூருவில் உள்ள எம். சின்னசாமி மைதானத்தில் நடைபெற வாய்ப்புள்ளது. முதல் கட்ட ஆட்டங்களில் பெங்களூரு, மும்பை, குவஹாத்தி, லக்னோ, கொல்கத்தா, சென்னை உள்ளிட்ட 10 நகரங்களில் மொத்தம் 20 போட்டிகள் நடைபெறும். இரண்டாவது கட்ட ஆட்டங்களில் நான்கு இரட்டைத் தலைப்புப் போட்டிகள் இடம்பெறும். பிற்பகல் போட்டிகள் இந்திய நேரப்படி மதியம் 3.30 மணிக்கும், மாலை போட்டிகள் 7.30 மணிக்கும் தொடங்கும்.

மும்பை இந்தியன்ஸ், கொல்கத்தா நைட் ரைடர்ஸ், சென்னை சூப்பர் கிங்ஸ், ராஜஸ்தான் ராயல்ஸ் உள்ளிட்ட அணிகள் பல்வேறு நகரங்களில் மோத உள்ளன. ராஜஸ்தான் ராயல்ஸ் அணி குவஹாத்தியில் தனது முதல் போட்டியை தொடங்கி, சென்னை சூப்பர் கிங்ஸ் மற்றும் மும்பை இந்தியன்ஸ் அணிகளை எதிர்கொள்ள உள்ளது. மேலும் பஞ்சாப் கிங்ஸ் அணி நியூ சண்டிகரில் உள்ள பிசிஏ மைதானத்தில் தனது முதல் போட்டிகளை விளையாடும். ராயல் சேலஞ்சர்ஸ்பெங்களூருஅணி தனது ஐந்து சொந்த மைதான போட்டிகளையும், ராய்ப்பூரில் இரண்டு போட்டிகளையும் நடத்தும். பஞ்சாப் கிங்ஸ் நான்கு போட்டிகளை நியூ சண்டிகரில் மற்றும் மூன்று போட்டிகளை தர்மசாலாவில் விளையாடும். ராஜஸ்தான் ராயல்ஸ் குவஹாத்தி மற்றும் ஜெய்ப்பூரில் தங்களது சொந்த மைதான போட்டிகளை நடத்த உள்ளன. இந்த அறிவிப்பால் கிரிக்கெட் ரசிகர்கள் மத்தியில் பெரும் உற்சாகம் ஏற்பட்டுள்ளது.

# 10 மாணவியரின் தாயாரை கௌரவப்படுத்தி ஒரு வருடத்திற்கான கல்வி கட்டணம் முழுமையாக ரத்து

## டாக்டர் அனுஷா ரவி அறிவிப்பு

தி கோவை ஹெரால்டு




கோவை பார்க் கல்வி குழுமத்தின் சார்பில் மகளிர் தின கொண்டாட்டம் மற்றும் "ஐகானிக் மாம் 2026" விருது வழங்கும் விழா கல்விக் குழுமத்தின் பிரேமா ரவி அரங்கத்தில் நடைபெற்றது.

பார்க்கல்விகுழுமத்தின் தலைவர் டாக்டர் ரவி மற்றும் முதன்மை செயல் அதிகாரி டாக்டர் அனுஷா ரவி தலைமையில் இந்த விழா சிறப்பாக நடைபெற்றது. அனைத்து மாணவிகள் மற்றும் பேராசிரியர்கள் கலந்து கொண்டனர்.

விழாவிற்கு தலைமை தாங்கிய டாக்டர் அனுஷா ரவி தனது சிறப்புரையில் வருடம் தோறும் நாங்கள் இந்த மகளிர் தினத்தை "துர்கா" என்ற பெயரில் சிறப்பாக நடத்தி பல சாதனைப் பெண்களை கௌரவ படுத்தியுள்ளோம்.

ஆனால் இந்த வருடம் ஏன்நாம்நம்முடையமாணவ மாணவியரின் தாயார்களை கௌரவிக்கக்கூடாது என்ற எண்ணத்தில் உதித்தது தான் "ஐகானிக் மாம் 2026" விருது.

மாணவ மாணவியர் தங்களது தாயாரை பற்றி 30 அல்லது 40 வினாடிக்குள் பேசிய காணொளியை இந்த விருதுக்காக நியமிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளப்பட்டது. பெறப்பட்ட காணொளி மொத்தம் 752.

இதில் முதல் சுற்றில் தேர்வானவை 35 காணொளிகள். 35 காணொளிகளையும் கல்லூரியின் இன்ஸ்டாகிராம் பக்கத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டு வாக்கெடுப்பு முறையில் 10 சிறந்த காணொளி தேர்வு செய்யப்பட்டது.

இந்தப் 10 தாய்மார்களையும் இந்த விழாவிற்கு அழைத்து வந்து அவர்களுடைய குழந்தைகளுடன் கௌரவப் படுத்தப்பட்டார்கள்.

கேடயம், கிரீடம், பட்டயம், பரிசு என்று வழங்கி கௌரவிக்கப்பட்டார்கள்.

இந்த காணொளிகள் மற்றும் தாய்மார்களின் வரவு அரங்கத்தில் இருந்த அனைவரின் கண்களையும் நனைத்தது. இந்த உணர்ச்சி மிகுந்த தருணத்தில் டாக்டர் அனுஷா ரவி இந்த 10 குழந்தைகளின் ஒரு வருடத்திற்கான கல்வி கட்டணத்தை ரத்து செய்வதாக மேடையில் அறிவித்து தாய்மார்களையும் அவர்களுடைய குழந்தைகளையும் ஆனந்த கண்ணீரில் மிதக்க வைத்தார்.

இந்த விழாவிற்கு சிறப்பு விருந்தினராக அழைக்கப் பட்டு இருந்த மேடைப் பேச்சாளர் டி சாந்தாமணி, நான் மேடைகளில் பல கருத்துக்களை நகைச் சுவையுடன் தெரிவித்து வந்துள்ளேன். ஆனால் இந்த நிகழ்வு என்னையும் கண்கலங்க வைத்துள்ளது. ஆகவே எப்படி பேசுவேன் என்று தெரியவில்லை என்று தனது உரையை துவங்கினார்.

மகளிர் தினம் கொண்டாடப்படும் வரலாற்றை தெளிவாக எடுத்துரைத்தவர் பல போராட்டங்களுக்கு மத்தியில் வென்ற பெண்களின் சாதனைகளை எடுத்துரைத்தார்.

தனது உரையில் பெற்றோரை இன்றே கௌரவித்து விடுங்கள், நீங்கள் கௌரவிக்கலாம் என்று நினைக்கும் போது அவர்கள் உங்களுடன் இருக்க மாட்டார்கள் என்று அறிவுரையை மாணவியர்களுக்கு கூறி தனது உரையை நிறைவு செய்தார்.

# 11 நாட்களில் 13,560 கி.மீ நிற்காமல் பறந்த பறவை



பிறந்து நான்கு மாதமேயான பட்டைவால் மூக்கன் பறவை 11 நாட்களில் அலாஸ்காவில் இருந்து டாஸ்மேனியாவுக்கு 13,560 கி.மீ தொலைவு நிற்காமல் பறந்து சாதனை படைத்துள்ளது.

பி6 என்று பெயரிடப்பட்ட இந்த பறவை, கடந்த 2022 ம் ஆண்டு இந்த சாதனையைப் படைத்ததாக அமெரிக்க புவியியல் ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. இதன், உடலில் 5 கிராம் எடையுள்ள சூரிய சக்தியில் இயங்கும் செயற்கைகோள் டிரான்ஸ்மீட்டர் பொருத்தப் பட்டிருந்தது. இதன்மூலம் அமெரிக்க புவியியல் ஆய்வுமையத்தின் (USGS) செயற்கைக்கோள் இந்தப் பறவையை கண்காணித்து, தகவலை உறுதி செய்துள்ளது. இந்தப் பறவைதான் உலகிலேயே நீண்ட தொலைவு நிற்காமல், பயணித்த உயிரினம் என்ற பெருமையைப் பெற்றுள்ளது. பட்டை வால் மூக்கன் பறவை 'உள்ளான்' இனத்தைச்சேர்ந்தது. நீண்ட அலகு , பட்டை போன்ற வாலை கொண்டிருக்கும். 230 முதல் 450 கிராம் வரை எடை கொண்டிருக்கும்.

சிறு பூச்சிகள், தாவரங்கள், மீன்கள் போன்றவற்றை உணவாக உட்கொள்கிறது. அலாஸ்கா மற்றும் சைபீரியாவின் ஆர்க்டிக் கடலோரத்தில் அதிகமாக வசிக்கின்றன. இரு வருடங்களுக்கு ஒரு முறை, குளிர்காலத்தில் ஆஸ்திரேலியா, நியூசிலாந்து நாடுகளுக்கு இவை, புலம் பெயர்வதை வழக்கமாகக் கொண்டுள்ளன. இந்த சமயத்தில் சாப்பிடாமல், தண்ணீர் குடிக்காமல், ஓய்வே எடுக்காமல் தொடர்ந்து பறந்துகொண்டே இருக்கும். பசிபிக் கடலின் மேல் பறக்கும் போது, பல ஆயிரம் கிலோமீட்டருக்கு நிலப்பரப்பே தென்படாது. இதைப் பற்றியெல்லாம் கவலைப்படாமல் பயணத்தை மேற்கொள்கின்றன.

பயணத்தைத் தொடங்குவதற்கு சில நாட்கள் முன்னரே, அலாஸ்காவில் வயிறு முட்ட உணவுகளை சாப்பிடத் தொடங்குகின்றன. இதனால், உடலில் கொழுப்புச்சத்து அதிகளவில் உருவாகியிருக்கும். பறக்கும் போது, இந்தப் பறவை தனது உடலை மாற்றியமைத்துக் கொள்கிறது. அதாவது வயிறு, கல்லீரல் போன்ற பெரிய உறுப்புகளைச் சுருக்கி, எடையைக் குறைத்துக் கொள்கிறது.

பறக்கும் போது, உடலில் அதிகமாக சேமிக்கப்பட்ட கொழுப்பு எரிந்து பறக்கும் சக்தியை தருகிறது. இதனால், உணவு தேட வேண்டிய அவசியம் எழாது. பல நாட்கள் வரை அவற்றால் உணவு இல்லாமல் பறக்க முடியும். போதுமான சக்தி உடலில் சேர்ந்த பின்னரே, இந்தப் பறவைகள் பறக்க தொடங்குகின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

# ஸ்ரீ இராமகிருஷ்ணா இணை மருத்துவ கல்லூரியில் உலக சிறுநீரக தினத்தை முன்னிட்டு கருத்தரங்கு



ஸ்ரீ இராமகிருஷ்ணா இணைமருத்துவக்கல்லூரியில் உலக சிறுநீரக தினத்தை முன்னிட்டு கருத்தரங்கு மற்றும் கண்காட்சி நடத்தப்பட்டது.

இக்கருத்தரங்கில் எஸ்.என்.ஆர்.சன்ஸ் குழுமத்தின் தலைமை செயல் அதிகாரி சி.வி ராம்குமார், மருத்துவ இயக்குநர் டாக்டர் எஸ்.ராஜகோபால், மருத்துவ கண்காணிப்பாளர் டாக்டர் எஸ். அழகப்பன், சிறுநீரகத் துறை தலைவர் மற்றும் சிறுநீரக முதன்மை ஆலோகர் டாக்டர் என். செழியன், சிறுநீரக ஆலோசகர் டாக்டர் ஜி.மதுசங்கர், கல்லூரி முதல்வர் டாக்டர் பி.சத்யா குத்துவிளக்கேற்றி துவக்கிவைத்தனர்.

கல்லூரி முதல்வர் டாக்டர் பி.சத்யா அனைவரையும் வரவேற்று வரவேற்புரை நல்கினார். சிறுநீரக ஆலோசகர் டாக்டர் ஜி.மது சங்கர் சிறப்புரை ஆற்றினார்.

அதையடுத்து மாதிரி விளக்கக்காட்சி போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டது.

மேலும் மாணவ, மாணவியர்களுக்கு பிளாஸ் மாபெரிசிஸ், உறுப்பு பரவல் தொழில்நுட்பம் மற்றும் டிஐஎன்ஐ போன்ற தலைப்புகளில் செயல்முறைப்பயிற்சிகள் கொடுக்கப்பட்டது.

# கோடை காலத்துக்கு ஏற்ற நெல்லிக்காய் ரசம் சாதம் தயாரிப்பது எப்படி?



உடலுக்கு ஊட்டச்சத்து நிறைந்த நெல்லிக்காய் ரசம் சாதம் தயாரிப்பது எப்படி என்பது குறித்து பார்க்கலாம்.

இன்னும் சில வாரங்களில் கோடைக் காலம் தொடங்கிவிடும். கோடைக் காலத்தில் நாம் அனைவரும் லேசான, எளிதில் ஜீரணமாகும் உணவு வகைகளையே எடுத்துக்கொள்ள வேண்டும். பலருக்கும் ரசம் சாப்பாடு என்பது பெரு விருப்பமாக இருக்கும். எனினும், பலரும் நெல்லிக்காய் ரசம் சாதம் சாப்பிட்டிருக்க மாட்டார்கள். நெல்லிக்காய் ரசம் சாதத்தை விரைவில் தயாரித்துவிடலாம். இது சுவையோடு உடலுக்கு மிகுந்த ஊட்டச்சத்தும் அளிக்கிறது.

நெல்லிக்காயில் வைட்டமின் சி அதிகமாக உள்ளது. இது உடலின் நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்க உதவுகிறது. மேலும், இது செரிமானத்தை மேம்படுத்துவதில் உதவியாக இருக்கும் என்று கருதப்படுகிறது. ரசம் சாதத்தில் சேர்க்கப்படும் போது, இது உணவிற்கு லேசான சுவையையும் புத்துணர்ச்சியூட்டும் சுவையையும் தருகிறது. இது உணவை மேலும் சத்தானதாகவும் ஆக்குகிறது.

எடையை குறைக்கும் முயற்சியில் இருப்பவர்கள் நெல்லிக்காய் ரசம் சாதம் எடுத்துக் கொள்ளலாம். ஏனெனில் இதில் எண்ணெய் குறைந்த அளவே பயன்படுத்தப்படுகிறது. இது வயிற்றை கனமாக்காது என்பதோடு, எளிதில் செரிமானமாகிவிடும்.

நெல்லிக்காய், தக்காளி, பூண்டு, கருப்பு மிளகு, சீரகம், கொத்தமல்லி விதைகள், அரிசி, துவரம் பருப்பு, ரசம் மசாலா போன்றவை தேவை. முதலில் புதிய நெல்லிக்காய் மற்றும் தக்காளியை சிறிய துண்டுகளாக நறுக்க வேண்டும். இதன்பிறகு பூண்டு, கருப்பு மிளகு, சீரகம் மற்றும் கொத்தமல்லி விதைகளை லேசாக நசுக்க வேண்டும். பின்னர், நறுக்கிய நெல்லிக்காய் மற்றும் தக்காளியைச் சேர்த்து அரைக்கலாம். குக்கர் அல்லது வாணலியில் சிறிது நெய்யை சூடாக்கி, கடுகு போடவும். பிறகு நெல்லிக்காய் மற்றும் தக்காளி விழுதை இட்டு சிறிது ரசம் மசாலாவைச் சேர்க்க வேண்டும்.

கழுவிய அரிசி மற்றும் துவரம் பருப்பு சேர்த்து, தேவைக்கேற்ப தண்ணீர் சேர்க்க வேண்டும். சுவையை அதிகரிக்க விரும்பினால் சில சிறிய நெல்லிக்காய் துண்டுகளைச் சேர்க்கலாம். பின்னர் குக்கரை மூடி, அரிசி மற்றும் பருப்பு வேகும் வரை சமைக்க வேண்டும். வெந்தவுடன், கொத்தமல்லி இலைகளைத் தூவி சூடாகப் பரிமாறலாம்.

குறுகிய நேரத்தில் சத்தான உணவு சமைக்க வேண்டும் என்போருக்கு நெல்லிக்காய் ரசம் சாதம் பொருத்தமாக இருக்கும். நெல்லிக்காய் ரசம் சாதத்தை ஒரே பாத்திரத்தில் சமைத்துவிடலாம் என்பதோடு, சுவையோடும் ஆரோக்கியமாகவும் இருக்கும்.

# இந்தியாவில் 40 ஆண்டுகள் படுக்கையில் இருந்த பெண்...

## பின்னணியில் கொடூரச்சம்பவம்



இந்தியாவில் சுமார் 11 ஆண்டுகளுக்கும் மேலாகச் சுயநினைவற்ற நிலையில், படுத்த படுக்கையாக கோமாவில் இருந்த 31 வயது ஹரீஷ் ராணாவைக் கருணைக்கொலை செய்ய உச்சநீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளது.

கடந்த 2013-ம் ஆண்டு பஞ்சாப் பல்கலையில் ஹாரீஸ் ராணா (தற்போது வயது 31) படித்து வந்தார். தான் தங்கியிருந்த கட்டடத்தின் 4வது மாடியில் இருந்து எதிர்பாராதவிதமாக கீழே விழுந்ததில், ஹாரீசின் மூளையில் பலத்த அடிபட்டது. முதுகுத்தண்டு வடமும் பாதிக்கப்பட்டது.

இதனால், கோமா நிலைக்குச் சென்றார். எந்த வித உணர்வுமின்றி உயிர்காக்கும் கருவிகளின் உதவியுடன் மட்டுமே வாழ வேண்டிய சூழலுக்குத் அந்த இளைஞர் தள்ளப்பட்டார். குழாய் வழியாகவே அவருக்கு உணவுச் செலுத்தப்பட்டது. மகனின் நிலையையும், மருத்துவச் செலவுகளையும் சமாளிக்க முடியாமல், ஹாரீஸ் ராணாவின் தந்தை மகனை கருணைக்கொலை செய்ய உச்ச நீதிமன்றத்தை அணுகினார். 4 மருத்துவர்கள் அடங்கிய குழு ஹாரீசின் உடல் நிலையை பரிசோதித்து, ' இனி நினைவு திரும்ப வாய்ப்பே இல்லை ' என்று உச்சநீதிமன்றத்துக்கு அறிக்கை அளித்தது. இதையடுத்து, நீதிபதிகள் ஜே.பி. பர்டிவாலா, கே.வி. விஸ்வநாதன் ஆகியோர் அடங்கிய அமர்வு, ஹாரீசை கருணைக் கொலை செய்ய அனுமதி வழங்கியுள்ளது. தொடர்ந்து, அவருக்கு குழாய் வழியாக வழங்கப்படும் உணவு நிறுத்தப்படும். அதோடு, செயற்கை சுவாசமும் நிறுத்தப்பட்டு, கருணைக் கொலை செய்யப்படுவார் கிட்டத்தட்ட 13 ஆண்டுகள் படுக்கையிலேயே கழித்த, ஒரு இளைஞனின் உயிர்கண்ணியத்துடன் விடுவிக்கப்படுகிறது. உச்சநீதிமன்றம் இத்தகையை முடிவெடுத்தது, இந்தியாவில் இதுவே முதன்முறை.

ஹாரீஸ் ராணாவுக்கு முன்னதாகவே, இந்தியாவில் பாலியல் வன்கொடுமையால் பாதிக்கப்பட்டு, படுக்கையிலேயே இருந்த நர்ஸ் ஒருவரையும் கருணைக்கொலை செய்ய வேண்டும் என்கிற கோரிக்கை எழுந்தது. அந்த பரிதாபத்துக்குரிய பெண்ணின் பெயர் அருணா ஷான்பாக். மும்பையின் கிங் எட்வர்டு நினைவு மருத்துவமனையில் இளம் நர்ஸாக பணியாற்றினார். 1973ம் ஆண்டு நவம்பர் 27ம் தேதி கிங் எட்வர்ட் மருத்துவமனையின் பேஸ்மெண்டிலேயே அந்த கொடூரச்சம்பம் நடந்தது. பணிக்கு வந்த அருணாவை வார்டு உதவியாளர் ஷோகன்லால் என்பவர் பாலியல் வன்கொடுமை செய்தார். அப்போது, நாய்ச்சங்கிலியை கொண்டு அருணாவின் கழுத்தை இறுக்கியதில் கழுத்து பகுதியில் கடும் பாதிப்பு ஏற்பட்டது. மூளைக்கு ஆக்ஸிஜன் கொண்டு செல்லும் நரம்புகள் செயல் இழந்தன. இதனால், அருணாவின் மூளை பாதிக்கப்பட்டது. ஆனால், முற்றிலும் செயல் இழந்துவிடவில்லை. 42 ஆண்டுகள் இவர் படுக்கையில் கிங் எட்வர்ட் மருத்துவமனையில் இருந்தார். இவரையும், கருணைக்கொலை செய்ய அனுமதி கோரப்பட்டது. ஆனால், உச்சநீதிமன்றம் அனுமதி வழங்கவில்லை. இறுதியாக, 2015ம் ஆண்டு மே மாதத்தில் இயற்கையாகவே அருணா மரணமடைந்தார்.

# மலர் தொண்டால் முக்தி பெற்ற முருக நாயனார்



சைவ சமயத்தில் சிறப்பாக போற்றப்படும் 63 நாயன்மார்களில் 15-வது இடத்தைப் பெறுபவர் முருக நாயனார். சிவபெருமானுக்கு உண்மையான பக்தியையும் தன்னலமற்ற தொண்டையும் அர்ப்பணித்த அடியவராக அவர் புகழ்பெற்றவர். இவரது வாழ்க்கை வரலாறு பெரிய புராணம் மற்றும் திருத்தொண்டர் தொகை போன்ற நூல்களில் இடம்பெற்று, எளிமையான சேவையும் உயர்ந்த ஆன்மீகநிலையை அடைய வழிவகுக்கும் என்பதை எடுத்துக்காட்டுகிறது.

முருக நாயனார் தற்போதைய தமிழ்நாட்டின் சோழநாட்டில் அமைந்துள்ள திருப்புகலூரில் ஒரு அந்தணர் குடும்பத்தில் பிறந்தவர். வேத அறிவில் தேர்ச்சி பெற்றிருந்தாலும், அவரது வாழ்க்கையின் மையமாக இருந்தது சிவபெருமானுக்கான மலர் தொண்டு. தினமும் அதிகாலை எழுந்து நீராடிய பிறகு காடுகள் மற்றும் குளங்கள் பகுதிகளுக்குச் சென்று தாமரை, செண்பகம், மல்லிகை, கொன்றை போன்ற நறுமணமிக்க மலர்களை சேகரிப்பார்.

மலர்களைப் பறிக்கும் போது அவர் இடைவிடாமல் புனிதமான பஞ்சாட்சர மந்திரமான "ஓம் நமசிவாய" என ஜெபிப்பது வழக்கம். இதனால் அவரது அன்றாட பணி தியானமாக மாறியது. வீட்டிற்கு திரும்பிய பிறகு அந்த மலர்களைக்கொண்டு சிவலிங்கத்திற்கும் பார்வதி தேவிக்கும் அலங்கரிக்க அழகிய மாலைகள் மற்றும் மலர் ஆபரணங்களை அன்போடு தயார் செய்தார். பின்னர் அவற்றை திருப்புகலூரில் உள்ள ஆலயத்திற்கு கொண்டு சென்று அர்ப்பணித்து வழிபடுவது அவரது தினசரி சேவையாக இருந்தது.

முருக நாயனார், திருஞானசம்பந்தர் மற்றும் திருநாவுக்கரசர் போன்ற மகான் நாயன்மார்களுடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தார். அவர்கள் திருப்புகலூருக்கு வருகை தந்தபோது அவர்களை அன்போடு வரவேற்று விருந்தோம்பல் செய்தார். குறிப்பாக திருஞானசம்பந்தருடன் அவருக்கு ஆழமான நட்பு இருந்ததாக கூறப்படுகிறது. சம்பந்தரும் முருக நாயனாரின் பக்தியைப் போற்றி தனது பாடல்களில் குறிப்பிட்டுள்ளார்.

முருக நாயனாரின் வாழ்க்கையின் இறுதிக் கட்டம் மிகவும் ஆன்மீக முக்கியத்துவம் வாய்ந்ததாக கருதப்படுகிறது. திருஞானசம்பந்தரின் திருமண விழாவிற்காக ஆச்சாள்புரம் சென்றிருந்த போது, சம்பந்தர் சிவபெருமானை நோக்கி பஞ்சாட்சரப் பதிகம் பாடி அனைவருக்கும் முக்தி வேண்டினார். அந்த நேரத்தில் சிவபெருமான் தெய்வீக ஒளியாக தோன்றியதாகக் கூறப்படுகிறது. அந்த ஒளியில் திருஞான சம்பந்தரும் அவரது மனைவியும் ஒன்றியதுடன், அங்கு இருந்த முருக நாயனாரும் பிற அடியவர்களும் சிவனொளியில் கலந்து இறைவனுடன் ஐக்கியம் அடைந்ததாக சைவ மரபு கூறுகிறது.

இவ்வாறு, மலர் தொண்டின் மூலம் இறைவனிடம் முழுமையான பக்தியைக் காட்டிய முருக நாயனாரின் வாழ்க்கை, எளிமையான சேவையும் உண்மையான பக்தியும் மனிதனை உயர்ந்த ஆன்மீகநிலைக்கு கொண்டு செல்லும் என்பதை உணர்த்தும் சிறந்த எடுத்துக்காட்டாக திகழ்கிறது.

## சாலை விபத்தில் மூளைச்சாவு: இளைஞரின் உடல் உறுப்புகள் தானம்- 3 பேருக்கு மறுவாழ்வு

தி கோவை ஹெரால்டு



திருப்பூர் மாவட்டம் உடுமலையைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் சாலை விபத்தில் மூளைச்சாவு அடைந்த நிலையில், அவரது உடல் உறுப்புகள் தானமாக வழங்கப்பட்டு மூன்றுபேருக்குமறுவாழ்வு கிடைத்துள்ளது.

உடுமலை பகுதியைச் சேர்ந்த பாஸ்கரன் (29) அப்பகுதியில் உள்ள காகித ஆலையில் தொழிலாளியாக பணியாற்றி வந்தார். இவருக்கு மனைவியும் 11 மாத குழந்தையும் உள்ளனர். பாஸ்கரனின் தந்தை ராஜகோபால் சமீபத்தில்உயிரிழந்ததால், அவரது 16-ஆம் நாள் காரியத்திற்கான பொருட்களை வாங்குவதற்காக கடந்த 6-ஆம் தேதி பாஸ்கரன் தனது மனைவி, குழந்தை மற்றும் சகோதரியுடன் காரில் உடுமலைக்கு சென்றிருந்தார்.

பின்னர் அங்கிருந்து ஊருக்கு திரும்பிக் கொண்டிருந்த போது, -பாலப்பம்பட்டி பகுதியில் உள்ள ஒரு பெட்ரோல் நிலையத்திலிருந்து டிராக்டர் ஒன்று திடீரென குறுக்கே வந்ததாக கூறப்படுகிறது. இதனால் கட்டுப்பாட்டை இழந்த பாஸ்கரனின் கார் டிராக்டரின் பின்னால் மோதியது. இந்த விபத்தில் தலையில் கடுமையாக காயமடைந்த பாஸ்கரன் கோவை அரசு மருத்துவமனையில் தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டார்.

மருத்துவர்கள் தீவிர சிகிச்சை அளித்தும் பலனின்றி பாஸ்கரன் மூளைச்சாவு அடைந்தார். இதையடுத்து அவரது குடும்பத்தினர் மனிதநேய உணர்வுடன் பாஸ்கரனின் உடல் உறுப்புகளை தானமாக வழங்க முன்வந்தனர்.

அதன்படி மருத்துவர்கள் அறுவைச் சிகிச்சை மூலம் அவரது கண்கள், கல்லீரல் மற்றும் சிறுநீரகங்களை அகற்றினர்.

இதில் கல்லீரல் மற்றும் கண்கள் கோவையில் உள்ள தனியார் மருத்துவமனைகளுக்கு வழங்கப்பட்டதுடன், சிறுநீரகம் கோவை அரசு மருத்துவமனைக்கு வழங்கப்பட்டது. இதன் மூலம்மூன்றுநோயாளிகள் மறுவாழ்வு பெற்றுள்ளனர்.

உடல் உறுப்புகள் தானம் செய்த பாஸ்கரனின் உடலுக்கு அரசு சார்பில் கோவை அரசு மருத்துவமனை முதல்வர் நிர்மலா மற்றும் மருத்துவர்கள், செவிலியர்கள் மரியாதை செலுத்தினர். இந்த சம்பவம் மனிதநேயத்தின் உயர்ந்த உதாரணமாகப் பாராட்டப்படுகிறது.

## கேஎம்சிஹெச் மருத்துவமனை உயிர்காக்கும் ‘எக்மோ’ சிகிச்சையில் தமிழகத்தின் முன்னோடி

### 2025-ம் ஆண்டில் 75 சிகிச்சைகள் செய்து சாதனை

தி கோவை ஹெரால்டு




கேஎம்சிஹெச் மருத்துவமனை, அதிநவீன தீவிர சிகிச்சை அளிப்பதில் இந்தியாவில்ஒருமுன்னணி மையமாகத் திகழ்கிறது.

குறிப்பாக, இதயம் மற்றும் நுரையீரல் செயலிழந்த நிலையில் உள்ள நோயாளிகளுக்கு ‘எக்மோ’ எனப்படும் செயற்கை சுவாசக் கருவி மூலம் மறுவாழ்வு அளிப்பதில் மருத்துவமனை முதலிடம் பெற்றுள்ளது. உயிருக்குப் போராடும் நோயாளிகளுக்கு இது ஒரு மிகப்பெரிய வரப்பிரசாதமாகும்.

எக்மோ என்பது ஒரு நோயாளிக்கு இதயம் மற்றும்நுரையீரல்தானாகச் செயல்பட முடியாத நிலையில் அளிக்கப்படும் ஒரு சிறப்பு சிகிச்சை முறை ஆகும். இது நோயைக் குணப்படுத்தாவிட்டாலும், உடல் உறுப்புகள் செய்ய வேண்டிய வேலையைத் தானேசெய்து,நோயாளியின் உடல் தானாகவே குணமடைவதற்குத்தேவையான ‘கூடுதல்நேரத்தை’ வழங்குகிறது.

உடலில் இருந்து ரத்தத்தை மெதுவாகக் குழாய்கள்மூலம் வெளியே எடுக்கிறது. அந்தரத்தத்தை ஒரு கருவிக்குள் செலுத்தி, அதில்ஆக்சிஜனைசேர்த்து, கரியமில வாயுவை நீக்குகிறது. சுத்திகரிக்கப்பட்ட ரத்தத்தைமீண்டும்நோயாளியின் உடலுக்குள் செலுத்துகிறது.

அதிநவீன வசதிகள் மற்றும்பயிற்சிபெற்றமருத்துவக் குழுவின் உதவியுடன், கடந்த 5 ஆண்டுகளில் 200-க்கும் மேற்பட்ட எக்மோ சிகிச்சைகளை கேஎம்சிஹெச் வெற்றிகரமாகச் செய்துள்ளது. குறிப்பாக, 2025-ஆம் ஆண்டில்மட்டும்75 எக்மோ சிகிச்சைகளை அளித்துள்ளது. இதுதமிழகத்திலேயே மிக அதிக எண்ணிக்கையாகும். இதன் மூலம் இந்தியாவின் மிகச்சிறந்த எக்மோ சிகிச்சை மையங்களில் ஒன்றாக கேஎம்சிஹெச் உருவெடுத்துள்ளது.

தமிழகத்திலேயே இரண்டாவது மருத்துவமனையாக ‘எக்மோ ஆம்புலன்ஸ்’ (ECMO Ambulance) வசதியை கேஎம்சிஹெச் அறிமுகப்படுத்தியுள்ளது. இந்த வசதி மூலம், உயிருக்கு ஆபத்தான நிலையில் உள்ள நோயாளிகளை எக்மோ கருவியின் உதவியுடனேயே பாதுகாப்பாக மருத்துவ மனைக்கு அழைத்து வர முடியும்.

வென்டிலேட்டர் அல்லது மருந்துகளுக்குக் கட்டுப்படாத, மீண்டும் குணப்படுத்தக்கூடிய நிலையில் உள்ள நோயாளிகளுக்கு எக்மோ சிகிச்சை வழங்கப்படுகிறது.

நோயின் ஆரம்பக் கட்டத்திலேயே இந்தச் சிகிச்சையைத் தேர்வு செய்வது சிறந்த பலனைத் தரும் என்று மருத்துவர்கள் கூறுகிறார்கள். மேலும் தகவலுக்கு: கேஎம்சிஹெச் எக்மோ குழுவைத் தொடர்பு கொள்ள: 0422-4323647 / 4323195.

## உலகின் இரண்டாவது பெரிய ஆயுத இறக்குமதி நாடு இந்தியா




ஸ்டாக்ஹோம் சர்வதேச அமைதி ஆய்வு நிறுவனம் வெளியிட்டுள்ள புதிய அறிக்கையின் படி, 2021 முதல் 2025 வரையிலான காலகட்டத்தில் இந்தியா உலகின் இரண்டாவது பெரிய ஆயுத இறக்குமதி நாடாகஉருவெடுத்துள்ளது. உலகளாவிய ஆயுத இறக்குமதியில் இந்தியாவின் பங்கு 8.2 சதவீதமாக இருப்பதாக அந்த அறிக்கை தெரிவிக்கிறது.

சீனா மற்றும் பாகிஸ்தானுடன் நிலவும் பாதுகாப்பு பதற்றம் காரணமாக இந்தியாவின் ஆயுத கொள்முதல் அதிகரித்துள்ளதாகவும் கூறப்பட்டுள்ளது. 2025 ஆம் ஆண்டுமே மாதத்தில் இந்தியா பாகிஸ்தான் இடையே ஏற்பட்ட குறுகிய காலஆயுதமோதலின்போது வெளிநாடுகளில் இருந்து வாங்கப்பட்ட ஆயுதங்கள் பயன்படுத்தப்பட்டதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.


கடந்த சில ஆண்டுகளில் இந்தியா தனது ஆயுத கொள்முதல் தொடர்புகளை மாற்றி அமைத்துள்ளது. முன்பு ரஷ்யாவை அதிகமாக சார்ந்திருந்த நிலையில், தற்போது மேற்கத்திய நாடுகளிடமிருந்து ஆயுதங்களை அதிகமாக வாங்கி வருகிறது. 2011 2015 காலகட்டத்தில் இந்தியாவின் ஆயுத கொள்முதலில் ரஷ்யாவின் பங்கு 70 சதவீதமாக இருந்த நிலையில், 20212025 காலகட்டத்தில் அது 40 சதவீதமாகக் குறைந்துள்ளது.

அதே நேரத்தில் பிரான்ஸ், இஸ்ரேல் மற்றும் அமெரிக்கா போன்ற நாடுகளிலிருந்து இந்தியா அதிகளவில் ஆயுதங்களை வாங்கிவருகிறது. குறிப்பாக பிரான்சுடன் ரஃபேல் போர் விமானங்கள், நீர்மூழ்கிக் கப்பல்கள் மற்றும் ஹெலிகாப்டர் உற்பத்தி தொடர்பான முக்கிய ஒப்பந்தங்கள் கையெழுத்தாகியுள்ளன.

மேலும், 20262027 ஆண்டிற்கான இந்தியாவின் பாதுகாப்பு பட்ஜெட் ரூ.7.85 லட்சம் கோடியாக உயர்த்தப்பட்டுள்ளது.

இதில் 75 சதவீதம் உள்நாட்டு பாதுகாப்பு தொழில்துறைக்கு ஒதுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. உலகளவில் 20212025 காலகட்டத்தில் அமெரிக்கா, பிரான்ஸ், ரஷ்யா, ஜெர்மனி மற்றும் சீனா ஆகியநாடுகள்சேர்ந்து சுமார் 70 சதவீத ஆயுத ஏற்றுமதியை மேற்கொண்டுள்ளன. இதில் அமெரிக்காவின் பங்கு 42 சதவீதமாக அதிகரித்துள்ளதாக அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

## வானிலும் பறக்கும், நீரிலும் நீந்தும் இந்தியாவின் முதல் ‘அவதார்’ ட்ரோன்



பெங்களூருவை தளமாகக் கொண்ட அக்வாஏர்எக்ஸ் தன்னாட்சி அமைப்புகள் என்ற புதிய தொழில்நுட்ப நிறுவனம், இந்தியாவின் முதல் வான் நீர் ட்ரோனை உருவாக்கி மார்ச் 5, 2026 அன்று அறிமுகப்படுத்தியுள்ளது. ‘அவதார்’ எனப் பெயரிடப்பட்டுள்ள இந்த ட்ரோன், வானில் பறப்பதுடன் நீருக்கடியில் நீந்தும் திறன் கொண்டதாக வடிவமைக்கப்பட்டுள்ளது.

இந்த ட்ரோன் உருவாக்கம் இந்தியாவின் பாதுகாப்பு மற்றும் ஆராய்ச்சி தொழில்நுட்பத் துறையில் முக்கியமான முன்னேற்றமாகக் கருதப்படுகிறது. சமீபத்தில் இந்த நிறுவனத்திற்கு செரோதாகாவின் முதலீட்டு பிரிவு மூலம் ரூ.12.5 கோடி முதலீடும் கிடைத்துள்ளது.


அக்வாஏர்எக்ஸ் நிறுவனத்தின் நிறுவனர் டி.எஸ்.கௌதமி கூறுகையில், கடல்சூழ்நிலைகளுக்கு ஏற்றவாறு மூன்று அடுக்கு பாதுகாப்பு அமைப்புடன் இந்தட்ரோன்வடிவமைக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார். உப்புநீர் அரிப்பைஎதிர்க்கும் வகையில் கார்பன் நார் அமைப்பும், சென்சார்களை பாதுகாக்கும் சிறப்பு பூச்சுகளும் இதில் பயன்படுத்தப்பட்டுள்ளன.

இந்த ட்ரோன் வானில் பறந்து கொண்டு கப்பல்களை கண்காணிப்பதுடன், தேவையான போது நீருக்கடியில் சென்று கப்பல்களின் அடிப் பகுதியையும் ஆய்வுசெய்ய முடியும்.

மேலும் ஆழ்கடலில் தெரிவுநிலை குறைவாக இருக்கும் சூழலில் ஒலி அலைகளை பயன்படுத்தி கடலடிப் பகுதியின் மூவடி வரைபடத்தைஉருவாக்கும் திறனும் இதில் உள்ளது.

பேட்டரி அளவு குறைவாக இருந்தால் ட்ரோன் நீருக்குள் செல்லாத வகையில் பாதுகாப்பு அமைப்பும் வழங்கப்பட்டுள்ளது. கடல்சார் பாதுகாப்பு, கடற்படை கண்காணிப்பு, கடலடிப் குழாய்கள் மற்றும் கேபிள்கள் ஆய்வு, சுற்றுச்சூழல்கண்காணிப்பு, கடல் ஆராய்ச்சி மற்றும் பேரிடர் மீட்பு நடவடிக்கைகள் உள்ளிட்ட பல துறைகளில் இந்த தொழில்நுட்பம் பயன்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## 28 சுங்கச்சாவடிகளில் ஏப்ரல் 1 முதல் கட்டண உயர்வு




தமிழ்நாட்டில் தேசிய நெடுஞ்சாலைகளில் இயங்கும் சுங்கச் சாவடிகளில் ஏப்ரல் 1ஆம் தேதி முதல் கட்டணம் உயர்த்தப்பட உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த உயர்வு வாகன ஓட்டிகளிடையே அதிருப்தியை ஏற்படுத்தி யுள்ளது.

தேசிய நெடுஞ்சாலை கட்டண விதிகள் 2008 இன் படி, பயனர் கட்டணம் ஆண்டுதோறும் மாற்றியமைக்கப்படுகிறது. அதன்படி மத்திய அரசு ஐந்து முதல் பத்து சதவீதம் வரை சுங்கக் கட்டணத்தை உயர்த்த அனுமதி வழங்கியுள்ளது.

தமிழ்நாட்டில் மொத்தம் 78 தேசிய நெடுஞ்சாலை சுங்கச்சாவடிகள் உள்ளன. இதில் 28 சுங்கச்சாவடிகளில் ஏப்ரல் 1ஆம் தேதி முதல் கட்டண உயர்வு அமலுக்கு வர உள்ளது. மீதமுள்ள சுங்கச்சாவடிகளில் செப்டம்பர் 1ஆம் தேதி முதல் கட்டணம் உயர்த்தப்படும்.

ஒவ்வொரு ஆண்டும் ஐந்து முதல் பத்து சதவீதம் வரை சுங்கக் கட்டணம் உயர்த்தப்பட்டு வரும் நிலையில், இந்த ஆண்டும் அதே நடைமுறை தொடர்கிறது.

ஏற்கனவே பெட்ரோல் மற்றும் டீசல் விலை உயர்வு குறித்து பொதுமக்கள் கவலைக்கிடமாக உள்ள நிலையில், சுங்கக் கட்டண உயர்வு மேலும் பொருளாதார சுமையை ஏற்படுத்தும் என வாகன ஓட்டிகள் கருத்து தெரிவித்து வருகின்றனர்.

## “குழந்தைகளை நன்றாக வெயிலில் விளையாடவிடுங்கள்”

### பெற்றோருக்கு மருத்துவர்கள் அறிமுறை

தி கோவை ஹெரால்டு




இந்தியமருத்துவசங்கம் மற்றும் கோவை நேருநகர் லயன்ஸ் கிளப் சார்பில், ரத்தினம் கல்லூரியில் எலும்பு அடர்த்தி விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது. கல்லூரி முதல்வர் பாலசுப்ரமணியம் நிகழ்ச்சிக்கு தலைமை தாங்கினார். ரத்தினம் கல்லூரி தலைமை செயல் அதிகாரி மாணிக்கம், துணை முதல்வர் சுரேஷ் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

லயன்ஸ் கிளப் ஆளுநர்கள் ராஜசேகர், செல்வராஜ், டாக்டர் பழனிசாமி, வழக்கறிஞர் சூரி. நந்தகோபால், கருணாநிதி, பாஸ்கர், ரத்தினம் கல்லூரி ஆய்வு மற்றும் மேம்பாட்டு பிரிவு டீன் சபரீஷ், பேராசிரியர் சீனிவாசன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக கலந்துகொண்டு பேசினர்.

இந்திய மருத்துவ சங்க தலைவர் டாக்டர் கோசல்ராம், இந்திய மருத்துவ சங்கத்தின் அடுத்த ஆண்டுக்கான தலைவர் டாக்டர் ஸ்ரீ ராமலிங்கம் ஆகியோர் முகாமில் பங்கேற்று அனைவருக்கும் எலும்பு அடர்த்திகுறித்தபரிசேதனை மேற்கொண்டனர். நிகழ்ச்சியில் பேசிய டாக்டர்கள் கூறியதாவது, பெண்கள்மற்றும்ஆண்கள் எலும்பு தொடர்பான குறைபாடுகளை தவிர்க்க ஆரோக்கியமாக உணவு மற்றும் முறையான உடற்பயிற்சியை மேற்கொள்ள வேண்டும். குழந்தைகளை நன்றாக வெயிலில் விளையாட விட வேண்டும். அப்போதுதான், அவர்களுக்கு குழந்தைப் பருவம் முதல் எலும்புக்கு தேவையான சக்தி சூரிய ஒளியில் இருந்து கிடைக்கும். 20 முதல் 22 வயது வரைதான் எலும்புக்கு சக்திகிடைக்கும் பருவம். அதற்குமேல், கிடைக்காது. 45 வயதுக்கு மேல் நம்மால் ஒன்றும் செய்ய முடியாது. எனவே, குழந்தைப்பருவத்தில் குழந்தைகளை நன்றாக விளையாட அனுமதியுங்கள்” என்று கேட்டுக் கொண்டனர்.

இந்த நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை ரத்தினம் கல்லூரி மேலாண்மைத்துறை பிரிவு தலைவர் டாக்டர். கவுசல்யாதேவி நேருநகர் லயன்ஸ் கிளப் தலைவர் கிருஷ்ணமூர்த்தி செயலாளர்கள் தேஜஸ்வினி, திவ்யதர்ஷினி, பொருளாளர் செந்தில்குமார் மற்றும் ஒருங்கிணைப்பாளர் செந்தில்குமார் ஆகியோர் செய்திருந்தனர்.

### ஆட்டோவில் இந்தியாவை சுற்றும்

## பிரிட்டிஷ் தம்பதி-17 மாநிலங்களை கடந்து வித்தியாசமான பயணம்



லண்டனில் வசித்து வந்த ஆடம் ஜென்னி என்ற தம்பதி, இந்தியாவின் பல்வேறுமாநிலங்களை ஆட்டோவில் சுற்றி பார்க்கும் வித்தியாசமான பயணத்தை மேற்கொண்டு கவனம் ஈர்த்துள்ளனர்.

கடந்த 10 ஆண்டுகளாக லண்டனில் வாழ்ந்து வந்த இந்த தம்பதி, இந்தியாவின் பலபகுதிகளில்உள்ளமக்களின்கலாச்சாரம் மற்றும் கிராமப்புற வாழ்க்கையை நேரடியாக அனுபவிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் இந்த முயற்சியை தொடங்கியுள்ளனர். இதுவரை அவர்கள் 17 மாநிலங்களை கடந்து ஆயிரக்கணக்கான கிலோமீட்டர்கள் பயணம் செய்துள்ளதாக தெரிவித்துள்ளனர்.

சொகுசுகார்கள் அல்லதுவிமானங்களில் பயணிப்பதைவிட, ஆட்டோவில்பயணிப்பது இந்திய மக்களுடன் நெருக்கமாக பழகும் வாய்ப்பை வழங்குவதாக அவர்கள் கூறுகின்றனர். ஆரம்பத்தில் இந்திய சாலைகள் மற்றும் போக்குவரத்து நெரிசல் தங்களுக்கு சவாலாக இருந்ததாகவும், ஆனால் மக்களின் அன்பும் ஆதரவும் தங்களை மிகவும் நெகிழ வைத்ததாகவும் தெரிவித்துள்ளனர்.

பயணத்தின் போது அவர்கள் எங்கு சென்றாலும் மக்கள் அன்புடன் வரவேற்று உணவு வழங்கி உதவி செய்வதாகவும், இந்த அனுபவம் தங்களுக்கு மறக்க முடியாததாக இருப்பதாகவும் அந்த தம்பதி நெகிழ்ச்சியுடன் பகிர்ந்துள்ளனர். இந்த வித்தியாசமான பயணம் சமூக வலைதளங்களிலும் பலரது பாராட்டைப் பெற்றுள்ளது.

# சென்னையிலிருந்து கோவைக்கு விமானத்தில் பறந்த 30 குழந்தைகள்



கோவை மற்றும் சென்னை மாவட்டங்களில் செயல்படும் ரவுண்ட் டேபிள் இந்தியா அமைப்புகள், ஜெம் மருத்துவமனை உடன் இணைந்து இந்த முயற்சியை மேற்கொண்டன. 'பிளைட் ஆப் பேண்டஸி' என்ற திட்டத்தின் மூலம் இந்த குழந்தைகள் சென்னையிலிருந்து கோவைக்கு விமானத்தில் அழைத்து வரப்பட்டு பின்னர் மீண்டும் சென்னைக்கு அழைத்து செல்லப்பட்டனர்.

இந்தத் திட்டத்தின் நோக்கம் ஏழை குழந்தைகளுக்கும் விமானப் பயண அனுபவத்தை வழங்குவதோடு, அவர்கள் வாழ்க்கையில் உயர்ந்த இலக்குகளை நோக்கி கனவு காணும் நம்பிக்கையை உருவாக்குவதாகும்.

இந்த முயற்சியில் கோவை ஆக்மி ரவுண்ட் டேபிள் 133, கோவை பெண்ட்டா ரவுண்ட் டேபிள் 101, மெட்ராஸ் மெட்ரோ ரவுண்ட் டேபிள் 95 மற்றும் ஜெம் மருத்துவமனை இணைந்து 30 குழந்தைகளுக்கு இந்த அனுபவத்தை வழங்கின.

கோவைக்கு வந்த குழந்தைகள் பராமரிப்பாளர்கள் மற்றும் தன்னார்வலர்களுடன் இணைந்து நகரின் முக்கிய இடங்களை பார்வையிட்டனர். ஜீடி கார் அருங்காட்சியகம், வனக் கல்லூரி அருங்காட்சியகம் மற்றும் மண்டல அறிவியல் மையம் போன்ற இடங்களை அவர்கள் சுற்றிப் பார்த்து மகிழ்ந்தனர்.

இந்த திட்டத்தை கோவை ஆக்மி ரவுண்ட் டேபிள் 133 அமைப்பின் தலைவர் ஸ்ரீராம், துணைத் தலைவர் வெங்கட் விஸ்வாஸ், செயலாளர் அக்ஷய் மற்றும் பொருளாளர் வருண் ஆகியோர் ஒருங்கிணைத்தனர். அதேபோல் கோவை பெண்ட்டா ரவுண்ட் டேபிள் 101 அமைப்பின் தலைவர் ஹர்ஷவர்தன், துணைத் தலைவர் பிரணவ் செந்தூர், செயலாளர் கரண் ரஹேஜா மற்றும் பொருளாளர் தருண் குப்தா ஆகியோரும் இதில் பங்கேற்று ஒத்துழைத்தனர்.

# ஸ்ரீ ராமகிருஷ்ணா கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் 39-வது ஆண்டு விழா




ஸ்ரீ ராமகிருஷ்ணா கலை மற்றும் அறிவியல் கல்லூரியின் 39-வது ஆண்டு விழா கல்லூரி வளாகத்தில் கொண்டாடப்பட்டது.

எஸ்.என்.ஆர்.சன்ஸ் அறக்கட்டளையின் நிர்வாக அறங்காவலர் டாக்டர் சுந்தர் ராமகிருஷ்ணன் விழாவிற்குத் தலைமை வகித்தார். ஸ்ரீராமகிருஷ்ணா கலை மற்றும் அறிவியல் கல்லூரியின் முதல்வர் மற்றும் செயலர் முனைவர் பி.எல்.சிவக்குமார் கல்வி, விளையாட்டு, தொழில்நுட்பம் போன்ற பல்வேறு துறைகளில் நிகழ்த்தப்பட்ட சாதனைகளை ஆண்டறிக்கையாக வாசித்தார்.

விழாவிற்குச் சிறப்பு விருந்தினராகக் கோயம்புத்தூர், ஜி.எஸ்.டி நுண்ணறிவு துணை இயக்குநர் எஸ்.பிரபாகரன், ஐ.ஆர்.எஸ்., கலந்து கொண்டு "எஸ்.ஆர்.சி.ஏ.எஸ்.3600" என்ற கல்லூரி மலரை வெளியிட்டார். அதைத் தொடர்ந்து, ஸ்ரீ ராமகிருஷ்ணா கலை மற்றும் அறிவியல் கல்லூரி வேதியியல் துறைத் தலைவர் முனைவர் வெ.பாலகுமாரைப் பாராட்டி சிறப்புப் பரிசும் கேடயமும் வழங்கப்பட்டது.

அதே போன்று கிரிக்கெட் வீரரும், ஸ்ரீ ராமகிருஷ்ணா கலை மற்றும் அறிவியல் கல்லூரி முதுநிலை முதலாமாண்டு பன்னாட்டு வணிகவியல் துறை மாணவருமான ஜி.கோவிந்தைப் பாராட்டி, சான்றிதழும், பதக்கமும் வழங்கப்பட்டது.

மேலும், இளநிலை பட்டப்படிப்பில் மூன்றாமாண்டு சி.எஸ்.டி.ஏ. துறை மாணவர் பி.பிரவின், முதுநிலை பட்டப்படிப்பில் இரண்டாமாண்டு மேலாண்மைத் துறை மாணவர் ஜி.கோபி கிருஷ்ணா ஆகியோர் சிறந்த மாணவர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு அவர்களுக்குச் சிறப்புப் பரிசும், கேடயமும் வழங்கப்பட்டன.

தொடர்ந்து, துறைவாரியாக அதிக மதிப்பெண்கள் பெற்று முதல் இரண்டு இடங்களைப் பிடித்த 64 மாணவ, மாணவிகளுக்கு விருதுகள் வழங்கப்பட்டன.

முன்னதாக, மாணவர் மன்றத் துணைத் தலைவர் எஸ்.வைஷ்ணவி வரவேற்றார். முடிவில் மாணவர் மன்றத் தலைவர் என்.எஸ்.கௌதம் நன்றி கூறினார்.

# மதுரையில் சித்திரைத் திருவிழா ஏப்ரல் 19-ல் தொடக்கம்

மதுரையின் முக்கிய ஆன்மிக அடையாளங்களில் ஒன்றாக விளங்கும் மான சித்திரைத் திருவிழா இந்த ஆண்டு ஏப்ரல் 19ஆம் தேதி கொடியேற்றத்துடன் கோலாகலமாக தொடங்குகிறது.

இந்த விழாவின் முக்கிய நிகழ்ச்சிநிரலை மதுரை மீனாட்சி அம்மன் கோவில் நிர்வாகம் அதிகாரப்பூர்வமாக வெளியிட்டுள்ளது.

அதன்படி, ஏப்ரல் 19ஆம் தேதி கோவிலில் கொடியேற்றம் நடைபெற்று திருவிழா தொடங்குகிறது. தொடர்ந்து ஏப்ரல் 26-ஆம் தேதி மதுரைக்கே அரசியாக அன்னை மீனாட்சி முடிசூடும் பட்டாபிஷேக நிகழ்ச்சி நடைபெற உள்ளது.

அடுத்த நாள் ஏப்ரல் 27ஆம் தேதி திக்குவிஜயம் நடைபெறும்.

ஏப்ரல் 28-ஆம் தேதி விழாவின் முக்கிய நிகழ்வான மீனாட்சி சொக்கநாதர் திருக்கல்யாணம் விமரிசையாக நடைபெறும்.

அதனைத் தொடர்ந்து ஏப்ரல் 29ஆம் தேதி மாசி வீதிகளில் அன்னை மீனாட்சி பவனி வரும் தேரோட்டம் நடைபெற உள்ளது.

திருவிழாவின் உச்ச நிகழ்வாக மே 1-ஆம் தேதி பச்சை பட்டு உடுத்தி கள்ளழகர் வைகை ஆற்றில் இறங்கும் வைபவம் நடைபெறும்.

இந்த நிகழ்வை காண லட்சக்கணக்கான பக்தர்கள் திரள்வார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

வெயில் அதிகமாக இருக்கும் என்பதால் பக்தர்களுக்கான குடிநீர் வசதி, பந்தல்கள் அமைத்தல் மற்றும் பாதுகாப்பு ஏற்பாடுகளை மதுரை மாநகராட்சியும் மாவட்ட நிர்வாகமும் மேற்கொண்டு வருகின்றன.

மேலும் திருவிழாவை முன்னிட்டு கூடுதல் பேருந்து வசதிகளும் ஏற்பாடு செய்யப்பட உள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

# கோவையில் முதல் குளிர்சாதன பேருந்து நிறுத்தம்

## சூலூரில் மக்கள் பயன்பாட்டிற்கு திறப்பு




கோவை மாவட்டத்தில் கோடைக்கால வெயிலின் தாக்கம் அதிகரித்து வரும் நிலையில், பயணிகளின் வசதிக்காக நவீன குளிர்சாதன பேருந்து நிறுத்தம் ஒன்று சூலூரில் தொடங்கப்பட்டுள்ளது. மாவட்டத்திலேயே முதன்முறையாக அமைக்கப்பட்ட இந்த வசதி பொதுமக்களின் கவனத்தை ஈர்த்துள்ளது.

சூலூர் பேரூராட்சி நிர்வாகத்தின் முயற்சியால் உருவாக்கப்பட்ட இந்த குளிர்சாதன பேருந்து நிறுத்தம் இன்று மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டது. இந்த நிகழ்வில் சூலூர் பேரூராட்சித் தலைவர் தேவி மன்னவன், எல்.ஜி மருத்துவமனைத் தலைவர் கோபிநாத், துணைத் தலைவர் லதா கோபிநாத் மற்றும் ஒன்றிய செயலாளர் மன்னவன் ஆகியோர் கலந்து கொண்டு ரிப்பன் வெட்டி திறந்து வைத்தனர்.

இந்நிகழ்ச்சியில் பேசிய பேரூராட்சித் தலைவர் தேவி மன்னவன், "கோடைக்காலத்தில் வெயிலின் தாக்கம் கடுமையாக இருக்கும். பேருந்துக்காக காத்திருக்கும் மக்கள், குறிப்பாக முதியவர்கள் மற்றும் குழந்தைகள் அதிக சிரமத்திற்கு உள்ளாகிறார்கள். இதை கருத்தில் கொண்டு அவர்களுக்கு ஒரு சிறந்த வசதி ஏற்படுத்த வேண்டும் என்ற நோக்கில் குளிர்சாதன பேருந்து நிறுத்தத்தை அமைத்துள்ளோம்" என்று தெரிவித்தார்.

இந்த பேருந்து நிறுத்தம் முழுவதும் உயர்தர கண்ணாடி பொருட்களால் வடிவமைக்கப் பட்டுள்ளதாகவும், பாதுகாப்பு அம்சங்களை கருத்தில் கொண்டு எளிதில் தீப்பிடிக்காத தொழில்நுட்பத்துடன் உருவாக்கப் பட்டுள்ளதாகவும் டெக்லர் ஆட்டோமேஷன் நிறுவனத்தைச் சேர்ந்த பார்த்திபன் தெரிவித்தார்.

மேலும், இந்த நிகழ்ச்சியின் ஒரு பகுதியாக புதிய 'செல்ஃபி பாயிண்ட்' ஒன்றும் திறந்து வைக்கப்பட்டது.

சூலூர் கட்டடப் பொறியாளர் சங்கத்தினரால் அமைக்கப்பட்ட இந்த செல்ஃபி பாயிண்டை புலவர் செந்தலை கௌதமன் திறந்து வைத்தார்.

இந்த நிகழ்ச்சியில் சங்கத் தலைவர் 'பசுமை நிழல்' விஜயகுமார், நிர்வாகிகள், பேரூராட்சி அதிகாரிகள் மற்றும் பொதுமக்கள் பலரும் கலந்து கொண்டனர்.

பேரூராட்சி நிர்வாகமே முன்வந்து இத்தகைய நவீன வசதிகளை ஏற்படுத்தியிருப்பது பொதுமக்களிடையே பாராட்டைப் பெற்றுள்ளது.

## நடிகர் அஜித்துக்கு காரை பரிசளித்த மஹிந்திரா

நடிகரும் கார் பந்தய வீரருமான அஜித் குமார் துபாயில் நடைபெற்ற கார் பந்தயத்தில் பங்கேற்பதற்காக அங்கு தங்கியிருந்தார். அந்த நேரத்தில் துபாயில் தாக்குதல் சம்பவம் நடைபெற்றதால் அவர் உடனடியாக சென்னை திரும்ப முடியாமல் அங்கேயே தங்கியிருக்க வேண்டிய நிலை ஏற்பட்டது.

அஜித் பாதுகாப்பாக இருப்பதாக அவரது மேலாளர் சுரேஷ் சந்திரா முன்பே தெரிவித்திருந்தார். பின்னர் கடந்த இரண்டு நாட்களுக்கு முன்பு அஜித் பாதுகாப்பாக சென்னை திரும்பினார்.

சென்னை திரும்பிய அஜித் குமாருக்கு அவரது கார் பந்தய ஆர்வத்தை பாராட்டும் வகையில் மகிந்திரா நிறுவனத்தின் வாகனத் துறை தலைவர் ஆர். வேலுசாமி சிறப்பு காரை பரிசாக வழங்கினார்.

உலகிலேயே முதல் மின்சார கார் பந்தய கருப்பொருளில் வடிவமைக்கப்பட்ட மகிந்திரா பி.இ. பந்தய சிறப்பு பதிப்பு விளையாட்டு பயன்பாட்டு கார் அஜித் குமாருக்கு பரிசாக வழங்கப்பட்டுள்ளது.

# நாளைமனிதன், ஜென்மநட்சத்திரம் படங்கள் உருவானது எப்படி?

## தக்காளி சீனிவாசனின் அசாத்திய திறமை

தி கோவை ஹெரால்டு






தமிழ் திரையுலகில் திகில்ப்படங்களை இரண்டு காலக் கட்டங்களாக பிரிக்கலாம். ஒன்று விட்டலாச்சார்யா காலம். மற்றொன்று தக்காளி சீனிவாசன் காலம். விட்டலாச்சார்யா எடுத்த திகில்ப்படங்களில் 'ஜெகன் மோகினி' தமிழகத்தில் பட்டி தொட்டியெல்லாம் ஓடியது. 'லெக்கின்ஸ் 'அணிந்த பேய்,மக்களை பயம் காட்டியது. சிரிக்கவும் வைத்தது. மக்கள் கூட்டம் கூட்டமாக தியேட்டர்களுக்கு வந்து படத்தைப் பார்த்து சென்றனர். தனது படங்களில் ஜெயமாலினியை எப்படி பயன்படுத்த வேண்டுமோ... அப்படி , பயன்படுத்திக் கொள்வார் விட்டலாச்சார்யா.

தொழில்நுட்பம் குறைந்த அந்த காலக் கட்டத்திலேயே அசத்தலாக மாயாஜால காட்சிகளை எடுத்து, ரசிகர்கள் மனதில் நீங்காத இடம் பிடித்தவர் விட்டலாச்சார்யா. இவரது காலக்கட்டத்துக்குப் பிறகு, தமிழ்த் திரையுலகில் பேய்ப் படங்களுக்கு சற்று பிரேக் விழுந்தது. இந்த சமயத்தில், தமிழ் திரையுலகுக்குள் வந்தவர்தான் தக்காளி சீனிவாசன். தக்காளிப்பழம் போல சிவப்பாக 'பொதக்' 'பொதக்' என்று இருந்ததால் பெயருக்கு முன்னால், 'தக்காளி' ஒட்டிக் கொண்டது.

தயாரிப்பாளர், இயக்குநர், இசையமைப்பாளர், பாடகர் என பல திறமைகள் இவரிடத்தில் உண்டு. முதலில். சாதாரண படங்களை எடுத்த தக்காளி சீனிவாசன் ஒரு கட்டத்தில் திகில்ப்படங்களுக்கு மாறினார். இவர், தயாரித்த படம்தான் 1989 ம் ஆண்டு வெளியான 'நாளை மனிதன்'. ஜெய்சங்கர், பிரபு, அமலா, அஜய் ரத்தினம் (அறிமுகம்) நடிப்பில் வேலு பிரபாகரன் இயக்கத்தில் வெளியான இந்த படம் தமிழ் ரசிகர்களை மிரள வைத்தது. குறிப்பாக, அஜய் ரத்தினத்தின் கேரக்டர் குழந்தைகளை மிரட்டியது. இந்த படத்தின் இரண்டாம் பாகமான 'அதிசய மனிதன்' படத்தையும் தக்காளி சீனிவாசன் தயாரித்தார். இதிலும், கடலோரக்கவிதைகள் ராஜா, சரண்ராஜ், ராதாரவி, நிழல்கள் ரவி, கௌதமி , கோவை சரளா என்று பெரிய நட்சத்திரப் பட்டாளமே நடித்தது. இப்போது, இந்தியன் பார்ட் 1, இந்தியன் பார்ட் -2 என்று யோசிப்பதற்கு முன்னரே, தமிழ் திரையுலகில் இரண்டாம் பாகத்தை அறிமுகப்படுத்தியவர் இந்த தக்காளி சீனிவாசன்.

தயாரிப்பாளர், இசையமைப்பாளர் என ஜொலித்த தக்காளி சீனிவாசனுக்கு ஒரு படத்தை இயக்க வேண்டுமென்பதுதான் லட்சியமாக இருந்தது. அப்படி, அவர் மெனக்கெட்டு இயக்கிய படம்தான் 1991ம் ஆண்டு வெளிவந்த 'ஜென்ம நட்சத்திரம்'. தொழில்நுட்பம் வளர்ந்த இந்த காலக்கட்டத்தில் திகில்ப்படங்களை எடுப்பது எளிது. ஆனால், அந்த காலக்கட்டத்திலேயே திகில்ப்படம் என்றாலே, 'ஜென்ம நட்சத்திரம்' தான் என்று சொல்லுமளவுக்கு இந்த படம் தமிழ் ரசிகர்களை பயம் கொள்ள வைத்தது. சாத்தானின் குறியீடுகளுடன் பிறக்கும் ஒரு குழந்தையும் (பேபி விசித்ரா )அதற்கு துணையாக இருக்கும் வேலைக்காரப் பெண்ணும் செய்யும் பயங்கரமான காரியங்களை சொல்வதுதான் இந்த படத்தின் கதை. ஆங்கிலத்தில் வெளிவந்த 'ஓமன்' படத்தின் தழுவலாக இருந்தாலும், தமிழ் ரசிகர்களுக்கு ஏற்ற வகையில், இந்த படத்தை இயக்கியிருந்தார் தக்காளி சீனிவாசன்.

இந்த படத்தை பார்த்து விட்டால் உறங்கும் போது, இரவு நேர கல்லறைத் தோட்ட காட்சிகளும், அந்த குழந்தையும் பார்த்தாலே பயம் கொள்ள வைக்கும் அந்த வேலைக்கார பெண் கேரக்டரும்தான் நினைவுக்கு வந்து பீதியை கிளப்பும். கடைசியாக 2011ம் ஆண்டு நாசர் நடித்த 'அடுத்தது ' என்ற படத்தை இயக்கினார். அதற்குப்பிறகு முற்றிலும் திரையுலகில் இருந்து விலகி விட்டார். பின்னர், பெங்களூருவுக்கு சென்று ஆதரவற்ற குழந்தைகளுக்கு ஒரு பள்ளியை தொடங்கி நடத்தி வந்தார். மனிதநேய சேவைகளிலும் ஈடுபட்டார். இந்த நிலையில், நேற்று உடல்நலக்குறைவு காரணமாக, திடீரென காலமானார். பெங்களூருவில் அவரது உடல் அடக்கம் செய்யப்பட்டது.

# உலகக் கோப்பை கால்பந்து ஈரான் புறக்கணிப்பு?



போர் முற்றியுள்ள நிலையில், உலகக் கோப்பை கால்பந்து தொடரில் இருந்து ஈரான் வெளியேற முடிவுசெய்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. ஆசிய பிரிவில் இருந்து முதல் அணியாக உலகக்கோப்பைக்கு தகுதி பெற்ற அணி ஈரான் என்பது குறிப்பிடத்தக்கது.

2026ம் ஆண்டு உலகக் கோப்பை கால்பந்து தொடர் ஜூன் 11ம் தேதி முதல் ஜூலை 19ம் தேதி வரை அமெரிக்கா, கனடா, மெக்சிகோ நாடுகளில் நடைபெறுகிறது. இந்த முறை 48 அணிகள் தொடரில் பங்கேற்கின்றன. உலக ரேங்கில் 20வது இடத்திலுள்ள ஈரான் அணி இந்த முறை 'சி' பிரிவில் பெல்ஜியம், எகிப்து, நியூசிலாந்து அணிகளுடன் இடம் பெற்றுள்ளது. லீக் சுற்றில், ஈரான் அணி ஆடும் மூன்று போட்டிகளுமே அமெரிக்க மண்ணில்தான் நடைபெறுகிறது. லாஸ் ஏஞ்சல்ஸ் நகரில் இரு ஆட்டங்களும் சீட்டல் நகரில் ஒரு ஆட்டமும் நடைபெறுகிறது.

இந்த நிலையில், அமெரிக்கா, இஸ்ரேல், ஈரான் நாடுகளுக்கிடையே போர் முற்றியுள்ளது. இதனால், உலகக் கோப்பை தொடரைப் புறக்கணிக்கும் முடிவில் ஈரான் இருப்பதாக தெரிகிறது.

இது தொடர்பாக, ஈரானிய கால்பந்து சங்கத் தலைவர் மெஹ்தி தாஜ் கூறுகையில், '' அமெரிக்கா மற்றும் இஸ்ரேலிய நாடுகள் தாக்குதல் நடத்துவது உலகக் கோப்பை தொடருக்கு நல்ல சகுனமாக இல்லை.

எங்கள் அதிகாரிகள் எந்த நடவடிக்கையையும் எடுப்பதற்கு முன்பு நிலைமையை மதிப்பாய்வு செய்வார்கள் . சமீப காலத்தில், தகுதிவாய்ந்த ஒரு அணி உலகக் கோப்பை தொடரில் பங்கேற்க மறுத்த சம்பவம் நடந்தது இல்லை. இந்த விஷயத்தில் முடிவெடுக்க இன்னும் கால அவகாசம் இருக்கிறது '' என்கிறார்.

இது தொடர்பாக , விரைவில் அதிகாரபூர்வ தகவல் வெளியாகலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அதே வேளையில், அமெரிக்க அதிபர் டொனல்ட் டிரம்ப், ''இந்த உலகக் கோப்பையில் ஈரான் விளையாடியானாலும் இல்லையென்றாலும் கவலைப்படப் போவதில்லை'' என்று தெரிவித்துள்ளார். ஆனால், ஈரான் கால்பந்து அணியை அமெரிக்க மண்ணில் அனுமதிப்பது குறித்து டிரம்ப் விளக்கம் அளிக்கவில்லை.

# தூத்துக்குடி 'நிர்பயா'வுக்கு நீதி கிடைப்பதை அதிமுக உறுதி செய்யும்: எடப்பாடி பழனிசாமி உறுதி



தூத்துக்குடி மாவட்டம் விளாத்திகுளம் அருகே பள்ளி மாணவி பாலியல் வன்கொடுமை செய்யப்பட்டு படுகொலை செய்யப்பட்ட சம்பவத்திற்கு அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.

இச்சம்பவத்தில் பாதிக்கப்பட்ட சிறுமிக்கு நீதி கிடைக்க அதிமுக தொடர்ந்து போராடும் என்றும் அவர் உறுதி அளித்துள்ளார்.

விளாத்திகுளம் அருகே உள்ள வேடநத்தம் கிராமத்தைச் சேர்ந்த 17 வயது சிறுமி, கடந்த 10-ஆம் தேதி மாலை இயற்கை உபாதை கழிக்கச் சென்றபோது மாயமானார்.

உறவினர்கள் தேடிய நிலையில், நேற்று முன்தினம் முட்புதர் ஒன்றில் அச்சிறுமி சடலமாகக் கண்டெடுக்கப்பட்டார்.

இச்சம்பவம் தமிழகம் முழுவதும் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

சிறுமி காணாமல் போனது குறித்து புகார் அளிக்கச் சென்றபோது, விளாத்திகுளம் அனைத்து மகளிர் காவல் நிலைய ஆய்வாளர் பிரவீனா அலட்சியமாகச் செயல்பட்டதாக உறவினர்களும் கிராம மக்களும் குற்றம் சாட்டியுள்ளனர். காவல்துறையின் இந்த மெத்தனப்போக்கிற்கு எடப்பாடி பழனிசாமி தனது கண்டனத்தைப் பதிவு செய்துள்ளார்.

இச்சம்பவம் குறித்து எடப்பாடி பழனிசாமி தனது எக்ஸ் பதிவில், "விளாத்திகுளம் வேடநத்தம் பள்ளி மாணவி பாலியல் வன்கொடுமை கொலை நாட்டையே உலுக்கியுள்ளது. பாதிக்கப்பட்டு உயிரிழந்த அச்சிறுமியின் குரலாக நீதிகேட்டு பாராளுமன்றம் முதல் நீதிமன்றம் வரை ஒலித்து வருகிறது அதிமுக.

களத்தில் உறவினர்கள் ஊர்மக்கள் போராட்டமும் வலுப்பெற்று வருகிறது. திமுக அரசின் சாக்குபோக்குகளை நம்பத் தயாராக இல்லை என்பதற்கு, பொம்மை முதல்வரின் தங்கையும், திமுக துணைப் பொதுச்செயலாளருமான கனிமொழியை மக்கள் விரட்டி அனுப்பியதே சாட்சி!

இவ்வளவு கொடூரமான வழக்கில் குற்றவாளியைக் கண்டறிய முடியவில்லை என்பது எவ்வளவு பெரிய கேவலம் மு.க.ஸ்டாலின் அவர்களே?

காவல்துறை சிஸ்டத்தை நீங்கள் எந்த அளவிற்கு சீரழித்து உள்ளீர்கள் என்பது இப்போதாவது உங்களுக்குப் புரிகிறதா?

இது இத்தோடு நிற்கப் போவது இல்லை. வரும் 17.03.2026 (செவ்வாய்க் கிழமை) அன்று தமிழகப் பெண்களின் பாதுகாப்பை நிர்கதியாக்கிய உங்கள் அரசுக்கு முடிவுரை கட்டப் போகும் மாபெரும் போராட்டத்தின் மூலம் வருவாய் மாவட்ட வாரியாக மக்கள் மன்றத்தில் களம் காண உள்ளது அதிமுக தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணி. தூத்துக்குடி நிர்கவா வுக்கு உரிய நீதி கிடைப்பதை அஇஅதிமுக உறுதி செய்யும்! விரைவில் அமையப்போகும் அதிமுக அரசு, எப்படி ஜெயலிலிதா தாய் போல பெண்களைக் காத்தார்களோ, அதேபோல, ஒரு தமையனாக நின்று தமிழகப் பெண்களை அரண் போல் காக்கும்" என தெரிவித்துள்ளார்.

# சிந்தனைக் கவிஞர் கவிதாசனின் நான்கு புதிய நூல்கள் வெளியீட்டு விழா

தி கோவை ஹெரால்டு




கோவையில் சிந்தனை கவிஞர் கவிதாசனின் நான்கு புதிய நூல்கள் வெளியீட்டு விழா கோவை காந்திபுரத்தில் உள்ள ஆர் வி ஹோட்டல் வளாகத்தில் நடைபெற்றது.

இவ்விழாவில் வெற்றி முழக்கம், வெற்றியின் ஓசை, துணிந்தால் சாதிக்க முடியும் மற்றும் சிந்தனை கவிஞர் கவிதாசனின் நூல்களை பகுப்பாய்வு செய்து ஸ்ரீ ராமகிருஷ்ணா கலை மற்றும் அறிவியல் கல்லூரியின், தமிழ்த்துறைத் தலைவர் முனைவர் த.விஸ்வநாதன் எழுதிய பன்முக ஆய்வு கட்டுரைகள் என நான்கு நூல்கள் வெளியிடப்பட்டன.


விழாவிற்கு சிறப்பு விருந்தினராக கோவை மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர் டாக்டர் கே.கார்த்திகேயன் அவர்கள் கலந்துகொண்டு சிறப்புரையாற்றினார்.

விழாவிற்கு வந்திருந்தவர்களை கோவை, பயனீர் கலை மற்றும் அறிவியல் கல்லூரியின், முதல்வர், முனைவர் க.முருகேசன் வரவேற்றார். முதல் பிரதியை கோவை, பாரதியார் பல்கலைக்கழக, பதிவாளர், முனைவர் ஆர். ராஜவேல் வெளியிட்டு சிறப்புரையாற்றினார். முதல் பிரதியை கோவை, ஸ்ரீ ராமகிருஷ்ணா கலை மற்றும் அறிவியல் கல்லூரியின், முதல்வர் மற்றும் செயலாளர், முனைவர் பி.எல்.சிவகுமார் பெற்றுக் கொண்டு வாழ்த்துரை வழங்கினார்.

வெற்றியின் ஓசை, வெற்றி முழக்கம், துணிந்தால் சாதிக்க முடியும் மற்றும் பன்முக ஆய்வு கட்டுரைகள் ஆகியவற்றின் நூல் அறிமுக உரையை முறையே கோவை, மேட்டுப்பாளையம், சச்சிதானந்த ஜோதி நிகேதன் பன்னாட்டு பள்ளியின், தமிழாசிரியர், முனைவர் ஜி. கருணாநிதி, கோவை, கவிஞர் மீ. உமா மகேஸ்வரி, பொள்ளாச்சி, இலக்கிய வட்டம், செயலாளர், கவிஞர் இரா. பூபாலன் மற்றும் கோவை, ஸ்ரீ ராமகிருஷ்ணா கலை மற்றும் அறிவியல் கல்லூரியின், தமிழ்த்துறைத் தலைவர் முனைவர் த. விஸ்வநாதன் ஆகியோர் வாசித்தனர்.

# டிஜிட்டல் திருட்டுக்கு கடும் கட்டுப்பாடு 3,100-க்கும் மேற்பட்ட டெலிகிராம் சேனல்கள் முடக்க உத்தரவு

மத்திய தகவல் மற்றும் ஒளிபரப்பு அமைச்சகம் டிஜிட்டல் திருட்டை கட்டுப்படுத்தும் நோக்கில் முக்கிய நடவடிக்கை ஒன்றை எடுத்துள்ளது. பதிப்புரிமை பெற்ற திரைப்படங்கள், இணையத் தொடர்கள் மற்றும் பிற உள்ளடக்கங்களை சட்டவிரோதமாக பகிர்ந்ததாக கூறப்படும் 3,100-க்கும் மேற்பட்ட டெலிகிராம் சேனல்களை உடனடியாக முடக்குமாறு அந்த நிறுவனத்திற்கு மத்திய அரசு உத்தரவிட்டுள்ளது.




அமேசான் பிரைம் வீடியோ, ஜியோ சினிமா, சோனி லிவ் போன்ற இணைய ஒளிபரப்பு தளங்கள் அளித்த புகாரைத் தொடர்ந்து இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. பல ஆயிரக்கணக்கான பயனர்களைக் கொண்ட இந்த சேனல்களில் புதிய திரைப்படங்கள், இணையத் தொடர்கள் மற்றும் ஒலிக் கதைகள் எந்தவித அனுமதியுமின்றி பகிரப்பட்டு வந்ததாக கூறப்படுகிறது.

மத்திய அரசு வெளியிட்டுள்ள அறிவிப்பின்படி, அந்த சேனல்களை மூன்று மணி நேரத்திற்குள் முடக்கவேண்டும் என்றும், தொடர்புடைய தகவல்களை அழிக்காமல் சமர்ப்பிக்க வேண்டும் என்றும் டெலிகிராம் நிறுவனத்திற்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

2026-ஆம் ஆண்டு கொண்டு வரப்பட்ட புதிய தகவல் தொழில்நுட்ப விதிகளின் அடிப்படையில் இந்த உத்தரவு வழங்கப்பட்டுள்ளது.

இன்றைய இளைஞர்களிடம் டெலிகிராம் பயன்பாடு அதிகரித்து வரும் நிலையில், சில சேனல்கள் திரையரங்குகளில் வெளியான திரைப்படங்களை குறுகிய நேரத்திலேயே சட்டவிரோதமாக பகிர்ந்து வந்தன.

இதனால் திரைப்பட தயாரிப்பாளர்கள் மற்றும் இணைய ஒளிபரப்பு தளங்களுக்கு பெரிய அளவில் நஷ்டம் ஏற்படுகிறது என கூறப்படுகிறது.

மேலும், சில சேனல்களில் ஆயிரக்கணக்கான சட்டவிரோத இணைப்புகள் இருப்பது அதிகாரிகளின் ஆய்வில் கண்டறியப்பட்டதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த நடவடிக்கையால் டிஜிட்டல் திருட்டை கட்டுப்படுத்த முடியும் என மத்திய அரசு நம்பிக்கை தெரிவித்துள்ளது.

Olirum Kovai
An Initiative of Coimbatore City Development Trust (CCDT)
Roadside trash needs clearing? Burning garbage?
NAMMA KOVAI
Get your civic issues fixed through the Namma Kovai app.
Download on the App Store
GET IT ON Google Play
94663 95555
www.olirumkovai.com
LAKSHAKA TEX LLP

# ஹார்முஸ் ஜலசந்தி மூடல்: இந்தியாவில் மருந்து விலை 10-20% உயர வாய்ப்பு

ஈரான் மீது இஸ்ரேல் மற்றும் அமெரிக்கப் படைகள் தொடர்ந்து 13 நாட்களாக நடத்தி வரும் தாக்குதல்களின் பின்னணியில், உலக வர்த்தகத்தில் முக்கியத்துவம் வாய்ந்த ஹார்முஸ் ஜலசந்தி தற்போது மூடப்பட்டுள்ளது. இதன் தாக்கமாக இந்தியாவில் மருந்துகள் மற்றும் அதனுடன் தொடர்புடைய தயாரிப்புகளின் விலை 10 முதல் 20 சதவீதம் வரை உயரக்கூடும் என மருத்துவத் துறை வல்லுநர்கள் எச்சரித்துள்ளனர்.

மருந்து விலை உயர்வுக்கு மூன்று முக்கிய காரணங்கள் கூறப்படுகின்றன. ஐரோப்பிய நாடுகளில் இருந்து இந்தியாவிற்கு வரும் பல உயிர் காக்கும் மருந்துகள் ஹார்முஸ் ஜலசந்தி வழியாகவே கொண்டு வரப்படுகின்றன. இந்த வழித்தடம் முடங்கியதால், சரக்குக் கப்பல்கள் ஆப்பிரிக்காவைச் சுற்றி நீண்ட தூரம் பயணிக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. இதனால் கப்பல் போக்குவரத்து கட்டணம் பலமடங்கு உயர்ந்துள்ளது.

மேலும், மருந்துத் தயாரிப்பிற்குத் தேவையான அடிப்படை மூலப் பொருட்கள் பெரும்பாலும் சவுதி அரேபியா மற்றும் ஐக்கிய அரபு அமீரகம் போன்ற வளைகுடா நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படுகின்றன. இந்த மூலப்பொருட்களின் விலையும் தற்போது அதிகரித்துள்ளதாக கூறப்படுகிறது.

இதனுடன், பெட்ரோலியப் பொருட்களின் விலை உயர்வால் மருந்துகளைப் பொதியிட பயன்படும் பிளாஸ்டிக் பாட்டில்கள் மற்றும் அட்டைப்பெட்டிகளின் விலையும் உயர்ந்துள்ளது. இதனால் மருந்துத் தயாரிப்பு செலவு மேலும் அதிகரித்துள்ளது.

தற்போது கையிருப்பில் உள்ள மருந்துகள் பழைய விலையிலேயே விற்பனை செய்யப்படுகின்றன. ஆனால் புதிய சரக்குகள் சந்தைக்கு வரத் தொடங்கும் மார்ச் மாத இறுதிக்குள் மருந்து விலை உயர்வு அமலுக்கு வரலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது. குறிப்பாக சர்க்கரை நோய், ரத்த அழுத்தம் மற்றும் இதய நோய்களுக்கு பயன்படுத்தப்படும் மருந்துகளின் விலையில் இதன் தாக்கம் அதிகமாக இருக்கும் என மருத்துவத் துறை வல்லுநர்கள் கூறுகின்றனர்.

CASH FOR GOLD
R-GOLD®
EXCHANGE
Mob: 93457 93457

# கோவை நேரு கல்வி குழுமங்கள் சார்பில் சிறப்பு அம்சங்கள் கொண்ட சிலை துவக்க விழா

தி கோவை ஹெரால்டு



கோவை மாவட்ட நிர்வாகம் மற்றும் கோயம்புத்தூர் மாநகராட்சி ஆகியவை கோவையின் பல முக்கிய பகுதிகளை ஸ்மார்ட் சிட்டி திட்டத்தின் கீழ் அழகுபடுத்தும் முயற்சியின் ஒரு பகுதியாக கோவையில் மாநகராட்சியோடு இணைந்து கோவை நேரு கல்வி குழுமம் கோவையின் சிறப்பு அம்சங்கள் கொண்ட சிலையை நீதிமன்ற நுழைவு வாயில் எதிரில் உள்ள போக்குவரத்து தீவுத்திடலில் நிறுவியுள்ளது.

இதன் துவக்க விழாவில் கோவை மாவட்ட ஆட்சித் தலைவர், பவன்குமார் ஜி கிரியப்பனவர், கோவை மாநகர காவல்துறை ஆணையாளர் என்.கண்ணன் மற்றும் கோவை, மாநகராட்சி, ஆணையாளர், எம்.சிவகுரு பிரபாகரன் ஆகியோர் கலந்துகொண்டனர். நேரு கல்வி குழுமங்களின், தலைமை நிர்வாக அதிகாரியும் செயலாளருமான டாக்டர் பி.கிருஷ்ணகுமார், நேரு கல்வி குழுமங்களில் இயக்குனர் அ. முரளிதரன் மற்றும் கல்லூரியின் முதல்வர்கள் பேராசிரியர்கள், சென்னை, பிளாக்ஷிப் மீடியா நிறுவனத்தின் நிர்வாகிகள் ஆர். மகாபிரபு, ஆர்.சதீஷ்குமார், உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

Thamarai International School
Towards Excellence
A Residential & Day Boarding CBSE School
THANJAVUR
Aff.No.1930251
Thamarai Nagar,Karunthattankudi (PO),
Thanjavur - Kumbakonam Bypass Road, Thanjavur - 613002
KUMBAKONAM
Aff.No.1930774
Ts No. 156/4 A, Asoor Main Road,
Kadichambadi, Kumbakonam - 612501
PATTUKKOTTAI
Aff.No.1931772
88/2A, East Coast Road,
Thambikkottai, Pattukkottai (Tk),
Thanjavur Dist.,- 614704
REGISTRATIONS OPEN (2026 - 27)
FOR PRE-KG TO IX & GRADE XI
A Perfect Destination for Quality Education
Our performance so far...
MBBS-795
IITs-33
BDS-124
NITs-57
NIFTEM-14
IIITs-23
BITS-6




The best education & the best infrastructure at a nominal fee in the entire Delta region..
Excellent Scholastic inputs embedded with student centric activities
www.thamaraischools.org
A one stop solution for all your educational needs
A school with a proven track record in the field of competitive exams like IIT JEE, NEET, CUET, IISER, NISER, CLAT etc.,
Holistic development which fabricates "Global Citizens" with Indian values
Foundation courses for IIT JEE,NEET & MAT for Grades 6 - 10
Hostel Facility Available @ Thanjavur & Kumbakonam
info@thamaraischools.org | infokum@thamaraischools.org | infopkt@thamaraischools.org
THANJAVUR : 04362 - 253360 / 62 / 64, 7806812920 / 22
KUMBAKONAM : 0435 - 3500300 / 301 8012597427 / 28 / 29
PATTUKKOTTAI : 6383355050 6369966801

THE KOVAI HERALD
M[illegible] 15, 2026 - SUNDAY

இந்தியாவில் முதல் முறையாக

## கோவை ராயல் கேர் சூப்பர் ஸ்பெஷாலிட்டி மருத்துவமனையில்

# மூளை ரத்தநாள சிகிச்சைக்கு புதிய சகாப்தம் தொடக்கம்



தி கோவை ஹெரால்டு

கோவையில் நிலம்பூரிலுள்ள ராயல் கேர் சூப்பர் ஸ்பெஷாலிட்டி மருத்துவமனையில் ரத்த நாள சிகிச்சைக்காக அதிநவீன மருத்துவ கருவியான பைபிளேன் கேத் லேப் கருவி அமைக்கப்பட்டுள்ளது.

சர்வதேச அளவில் கதிர்வீச்சியல் துறையில் பயன்படும் இந்த அதிநவீன தொழில்நுட்ப கருவி, மூளை மற்றும் பிற ரத்தநாள சிகிச்சையில் புதிய தொழில்நுட்பத்தைக் கொண்டது என்று மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்.

மருத்துவமனையின் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குனர் டாக்டர் க.மாதேஸ்வரன் கூறுகையில், ''நாட்டிலேயே முதல் முறையாக இத்தகைய மேம்பட்ட தொழில்நுட்ப வசதியுடன் கூடிய கருவி ராயல்கேர் மருத்துவமனையில் நிறுவப்பட்டுள்ளது.

இதனால், எங்கள் மருத்துவமனை தேசிய அளவில் கவனத்தை பெற்றுள்ளது. இந்த கருவியின் மூலம் நோயாளிகளுக்கும் மருத்துவ பணியாளர்களுக்கும் ஏற்படும் கதிர்வீச்சு பாதிப்பு கிட்டத்தட்ட 50 சதவிகிதம் குறைத்து விட முடியும். துல்லியமான மற்றும் தெளிவான உயர்தர மருத்துவ படங்களை வழங்கும் திறனை இந்த கருவி கொண்டுள்ளது.

மென்மையான உடல் திசுக்களையும் நேரடியாக துல்லியமாக படம் பிடிக்கும் திறனும் இந்த கருவியில் இருக்கிறது. அறுவை சிகிச்சைக்கு முன் எடுக்கப்படும் படங்களை ஒன்றிணைத்து முப்பரிமாண படமாக உருவாக்கும் வசதியையும் இந்த கருவி கொண்டுள்ளது. இதன் மூலம் மருத்துவர்கள் துல்லியமாக நோயாளிகளுக்கு சிகிச்சை மேற்கொள்ள முடியும்.

புற்றுநோய் பாதிப்புக்குள்ளான ரத்தநாளங்களை துல்லியமாக கண்டறிந்து சிகிச்சை அளிக்கவும் இந்த கருவி உதவுகிறது. மூளை ரத்தநாள வீக்கம், பக்கவாதம் உள்ளிட்ட பல்வேறு நரம்பியல் சிக்கல்களுக்கு பாதுகாப்பான மற்றும் விரைவான சிகிச்சை வழங்கப்படும். சர்க்கரை நோய் மற்றும் சிறுநீரக பாதிப்பு உள்ள நோயாளிகளுக்கு பயன்படுத்தபடும் மருந்தின் அளவையும் குறைக்கவும் உதவுகிறது என்று அவர் தெரிவித்தார்.



இந்த புதிய நவீன மருத்துவ கருவியின் அறிமுக விழா ராயல்கேர் மருத்துவமனையில் நடைபெற்றது. வருமான வரி முதன்மை ஆணையர் அருண் சி.பாரத் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு கருவியை துவக்கி வைத்தார். நிகழ்ச்சியில் மருத்துவமனையின் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குனர் டாக்டர் க.மாதேஸ்வரன், இயக்குனர் கே.பி. அழகேசன், தலைமை செயல் அதிகாரி கே.டி.மணி செந்தில்குமார், மருத்துவர்கள் ஹரிஹரபிரசாத், சம்பத்குமார், மற்றும் சொக்கலிங்கம் ஆகியோர் கலந்து கொண்டனர்.



பிலிப்ஸ் அசூரியன் ஆர்-3 பை பிளேன் கேத் லேப்

## ‘எல்லை தாண்டி கனவு காணுங்கள்’ ரேஸ்கோர்சில் அமைக்கப்பட்ட சிலை திறப்பு



தி கோவை ஹெரால்டு

கோவையின் முக்கியப் பகுதியான ரேஸ்கோர்ஸ் காஸ்மோபாலிட்டன் கிளப் சந்திப்பு அருகே, மாணவர்களின் லட்சியக் கனவுகளைப்பிரதிபலிக்கும் வகையில், எல்லையை தாண்டி கனவு காணுங்கள் என்ற பெயரில் சிலை அமைக்கப்பட்டுள்ளது.

தி கேம்ஃபோர்ட் இன்டர்நேஷனல் பள்ளி சார்பில் அமைக்கப்பட்ட இந்த சிலையை கோவை மாவட்ட ஆட்சியர் பவன் குமார் கிரியப்பனவர் மற்றும் கோவை மாநகராட்சி ஆணையர் சிவகுரு பிரபாகரன் ஆகியோர் திறந்து வைத்தனர். உலக உருண்டையின் மீது நின்றபடி, இரு சிறுவர்கள் ஒரு கயிற்றின் மூலம் நிலவை கட்டி இழுப்பது போல் சிலை வடிவமைக்கப்பட்டுள்ளது. எல்லைகளை தாண்டி கனவு காணுங்கள் என்கிற கருத்தை வலியுறுத்தும் வகையில் இந்த சிலை உருவாக்கப்பட்டுள்ளது. இந்த சிலை, கடின உழைப்பு, விடாமுயற்சி மற்றும் எல்லைகளைத் தாண்டிச் சாதிக்கும் மனப்பான்மையைக் குறிப்பிடுகிறது.

இது குறித்து கேம்ஃபோர்டு சர்வதேச பள்ளித் தலைவர் அருள் ரமேஷ் மற்றும் தாளாளர் பூங்கோதை ஆகியோர் கூறுகையில், “அறிவாற்றல், மன உறுதி மற்றும் நற்பண்புகள் இருந்தால் எட்ட முடியாத கனவு என்று எதுவுமே இல்லை என்பதை மாணவர்களுக்கும் பொதுமக்களுக்கும் உணர்த்துவதே இந்த சிலை அமைக்கப்பட்டதன் நோக்கம்” எனத் தெரிவித்தனர்.

## அதிமுகவுடன் விஜய் கைகோர்த்தால்... முதல்வர் ஸ்டாலின் அமைத்த ரகசிய குழு!

தமிழக சட்டமன்ற தேர்தலில் இந்த முறை நான்கு முனை போட்டி காணப்படும். விஜய் அரசியலுக்குள் நுழைந்து ஆட்சி அதிகாரத்தில் பங்கு எனக் கூறியதிலிருந்து ஒவ்வொரு கூட்டணி கட்சியும் தங்களின் தலைவர்களிடம் பேச ஆரம்பித்து விட்டனர். குறிப்பாக திமுகவில் விஜய் எங்களுக்கு எவ்வளவு சீட் தர தயாராக உள்ளார் நாங்கள் மாறி விடுவோம் என்று சூசகமாக கூறியே கூடுதல் எண்ணிக்கையில் சீட் பெற்று விட்டனர். ஆனால், எந்த ஒரு கூட்டணியுமின்றி தற்போது வரை தமிழக வெற்றிக் கழகம் தனித்து தான் நிற்கிறது.

அதேவேளையில், கரூர் சிபிஐ வழக்கு மூலம் விஜய்யை பாஜக கைக்குள் கொண்டு வர திட்டமிட்டுள்ளது. டெல்லி மேலிடத்திலிருந்து கூட அவருக்கு மிரட்டல் வந்ததாக பனையூர் காரர்கள் பேசி வருகின்றனர். சமீபத்தில் நடந்த திடீர் ஆலோசனை கூட்டம் கூட நிர்வாகிகளிடம் பாஜகவுடன் கூட்டணி வைப்பது குறித்து விவாதிக்க தானாம். விஜய், பாஜக அதிமுகவுடன் கூட்டணி வைத்து விட்டால், திமுகவிற்கு அது பெரும் சவாலாக இருந்து விடும். குறிப்பாக, திமுக தான் தங்கள் எதிரி எனக் கூறிவரும் விஜய்க்கு கூட்டணியில் சில நிபந்தனைகளை வைத்து பாஜகவில் இணைத்துக் கொள்ள போகிறதாம். முதலில் எதிரியை வீழ்த்துவோம், பின்பு கூட்டணிக்குள் சமரசத்தை கொண்டு வந்து விடலாம் என்ற பாணியில் பேசி வருகிறார்களாம். மற்றொருபுறம் கூட்டணியில் இணையவில்லை என்றால் கரூர் வழக்கை வைத்து கட்டாயம் சிறைக்கு அனுப்பிவிடுவோம் என்றும் மிரட்டுகிறார்களாம்.

இதனால் விஜய் அவசர கட்ட ஆலோசனைக் கூட்டத்தில் பாஜகவுடன் கூட்டணி வைப்பது குறித்து முடிவெடுத்துள்ளதாக தகவல்கள் கசிந்துள்ளது.

இது திமுகவிற்கு பெரும் சவாலாகவே இருக்கும். இவர்கள் கூட்டணியை வீழ்த்தும் அளவிற்கு பெரிய திட்டத்தை ஸ்டாலின் கையில் எடுக்க வேண்டியிருக்கும். விஜயின் முடிவு பற்றிய செய்தி முன்கூட்டியே திமுக தலைமைக்கு சென்று விட்டதாம். இதனால், ஸ்டாலின் ரகசிய குழு அமைத்து இவர்களை வீழ்த்து திட்டம் தீட்ட ஆரம்பித்துவிட்டாராம்.

அதிமுக பாஜக என வரும்போது, சமாளிப்பது எளிது, இவர்களுடன் விஜய் சேர்ந்தால் கட்டாயம் நம்மால் வெற்றி பெற முடியாது என ஸ்டாலின் எண்ணுகிறாராம்.

இதனால், தனிக்குழு போட்டு நிலைமையை திமுக ஆராய்ந்து வருகிறதாம்.

## சிறார்களை பாராட்டிய முதல்வர் ஸ்டாலின்



கடலூர் மாவட்டம் பண்ருட்டியைச் சேர்ந்த சிறுவர்கள் தேவா, ஜீவா. இவர்கள் சோசியல் மீடியாவில் ஹாய் காய்ஸ் நான் உங்கள் தேவா என்ற அறிமுகத்துடன் வீடியோக்களை பதிவிட்டு பிரபலமானவர்கள். தங்களின் கலகலப்பான பேச்சில் கல்வியின் முக்கியத்துவத்தை வலியுறுத்தியும், நகைச்சுவையாகவும் வீடியோக்களை வெளியிடும் இவர்களை, முதல்வர் ஸ்டாலின் நேரில் அழைத்து பாராட்டி, புத்தகங்களை வழங்கி பாராட்டினார். சிறுவர்களிடம் பேசிய முதல்வர் ஸ்டாலின், “ நிறைய பேர் ரீலிஸ் போடுறாங்க, ஏன் உங்களை மட்டும் கூப்பிட்டேன் தெரியுமா? உங்களை உற்சாகப்படுத்தி பாராட்டத் தான் கூப்பிட்டேன். உங்க வீடியோவை பார்த் தேன். படிங்க படிங்க’ன்னு சொல்றீங்க...நானும் கல்வி சார்ந்த எல்லாக் கூட்டத்திலும் இதை சொல்றேன்.

நீங்க இந்த வயசுலேயே இதை சொல்றீங்க, அதனாலத்தான் உங்களை பாராட்டக் கூப்பிட்டேன். ரீல்ஸ் எல்லாம் நல்லா போடுறீங்க. அதேபோல் உங்க படிப்பிலும் கவனம் செலுத்தணும்” என தேவா, ஜீவாவை பாராட்டி அட்வைஸ் செய்தார்.

## விளம்பரத்தை அள்ளும் யூடியூப் பணத்தில் கொழிக்கும் கூகுள்




தி கோவை ஹெரால்டு

பொழுதுபோக்கு மற்றும் மீடியாவை பொறுத்த வரை, ஒரு காலத்தில் ஹாலிவுட் படங்கள் மற்றும் அமெரிக்க செய்தி நிறுவனங்கள் தான் மிக அதிக விளம்பர வருமானத்தைப் பெறும் சூழல் இருந்தது. தற்போது, பொழுதுபோக்கு அம்சங்கள் பெரிய திரையில் இருந்து மொபைல் ஸ்கிரீனுக்கு மாறி விட்டது. கூகுளின் யூடியூப் பாரம்பரிய சினிமா தயாரிப்பு நிறுவனங்களுக்கு மிகப் பெரிய சவாலாக மாறியுள்ளது. யூடியூப் மூலம் கூகுள் நிறுவனத்துக்கு கோடி கோடியாக விளம்பர வருவாய் கொட்டுகிறது. ஆண்டுக்கு யூடியூப் மூலம் கூகுள் பெறும் விளம்பர வருவாய் டிஸ்னி, என்.பி.சி யூனிவர்சல், பராமவுன்ட், வார்னர் பிரதரஸ் டிஸ்கவரி போன்ற நிறுவனங்களின் ஒட்டு மொத்த விளம்பர வருவாயை விட அதிகம்.

மோஃப்ட்நாதன்ஸன் என்ற மீடியா ஆய்வு நிறுவனம் நடத்திய ஆய்வின்படி, கடந்த 2025ம் ஆண்டு மட்டும் கூகுள் நிறுவனம் 40.4 பில்லியன் அமெரிக்க டாலர்களை யூடியூப் வழியாக வருவாயாக ஈட்டியுள்ளது( இந்திய மதிப்பில் 3.75 லட்சம் கோடி). இதே காலக்கட்டத்தில், டிஸ்னி, என்.பி.சி யூனிவர்சல், பராமவுன்ட், வார்னர் பிரதரஸ் டிஸ்கவரி நிறுவனங்களின் ஒட்டு மொத்த விளம்பர வருவாய் 37. 8 பில்லியன் அமெரிக்க டாலர்கள் தான். பல ஆண்டுகளாக யூடியூப் சீராக வளர்ந்து வருவதால், கடந்த ஆண்டு யூடியூப்பின் விளம்பர வருவாய் தாறுமாறாக எகிறியுள்ளது. இதனால், யூடியூப் பாரம்பரியமான ஹாலிவுட் மற்றும் மீடியா நிறுவனங்களை விட அதிக வருவாயை பெற தொடங்கியுள்ளதாக அந்த ஆய்வு நிறுவனம் தெரிவிக்கிறது. வருவாய் மட்டுமல்ல, யூடியூப்பில் பார்வையாளர்களின் எண்ணிக்கையும் சீராக அதிகரித்து வருகிறது.

கடந்த ஜனவரி மாதத்தில் அமெரிக்க தொலைக்காட்சி நிறுவனங்களின் பார்வையாளர்களின் எண்ணிக்கையில் யூடியூப் 12.5 சதவீதத்தைக் பெற்றிருந் ததாக நீல்சன் ஆய்வு நிறுவனத்தின் தரவுகள் கூறுகிறது. இது டிஸ்னி, என்பிசி யுனிவர்சல், பாரமவுண்ட் மற்றும் வார்னர் பிரதர்ஸ் டிஸ்கவரி நிறுவனங்களின் ஒருங்கிணைந்த ஸ்ட்ரீமிங் பார்வையாளர்களை விட அதிகமாகும்.

யூடியூப்பின் விளம்பர வருவாய் அதிகரிக்க முக்கிய காரணம், படைப்பாளர் சார்ந்த வணிக யுத்தி ஆகும். மற்ற நிறுவனங்கள் தங்களது சொந்த தயாரிப்புகளை வெளியிடுகின்றன. ஆனால், யூடியூப் கண்டென்ட் கிரியேட்டர்களை நம்பியுள்ளது. கொரோனா காலக் கட்டத்துக்கு பிறகு, கண்டென்ட் கிரியேட்டர்களின் எண்ணிக்கை உலகம் முழுக்க கோடிக்கணக்கில் அதிகரித்துள்ளது. இவர்களுக்கு எல்லாம், யூடியூப் தான் பிரதான தளமாக அமைந்துள்ளது. லட்சக் கணக்கானோர் விதவிதமான கண்டென்டுகளை கொடுப்பதால், யூடியூப் நிறுவனத்துக்கே விளம்பரம் அளிக்க பெரிய நிறுவனங்கள், விளம்பர ஏஜன்சிகள் விரும்புகின்றன. வீடியோ உள்ளடக்கத்தை அதிகரிக்க, கூகுள் விளம்பர வருவாயில் கணிசமான பகுதியை படைப்பாளர்களுடன் பகிர்ந்து கொள்கிறது. பொதுவாக, நல்ல தரமான வீடியோக்களிலிருந்து கிடைக்கும் விளம்பர வருவாயில் சுமார் 55 சதவீதத்தை கண்டென்ட் கிரியேட்டர்களுக்கே யூடியூப் வழங்குகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

## தமிழ்நாட்டில் பெட்ரோல், டீசல் பற்றாக்குறை இல்லை: இந்திய ஆயில்

தமிழ்நாட்டில் பெட்ரோல் மற்றும் டீசல் போதுமான அளவில் கையிருப்பில் உள்ளதாக இந்திய ஆயில் நிறுவனம் தெரிவித்துள்ளது. மாநிலம் முழுவதும் உள்ள பெட்ரோல் நிலையங்களுக்கு எரிபொருள் விநியோகம் வழக்கம்போல் நடைபெற்று வருவதாகவும் கூறப்பட்டுள்ளது.

சில இடங்களில் அச்சம் காரணமாக மக்கள் அதிக அளவில் எரிபொருள் வாங்கியதால், சில நிலையங்களில் தற்காலிகமாக விநியோகத்தில் குறைவு ஏற்பட்டதாகவும் நிறுவனம் விளக்கம் அளித்துள்ளது.

பொதுமக்கள் தேவையற்ற முறையில் எரிபொருளை சேமித்து வைப்பதை தவிர்க்க வேண்டும் என்றும், பிளாஸ்டிக் கேன் அல்லது அனுமதி பெறாத பாத்திரங்களில் பெட்ரோல் சேமிப்பது பாதுகாப்பு அபாயம் ஏற்படுத்தும் என்பதால் அதை தவிர்க்குமாறு இந்திய ஆயில் கேட்டுக்கொண்டுள்ளது.

## இந்த வார டிரெண்டிங் மீம்




Published by S.Kamalakannan Printed by S.Prabhakaran on behalf of Senthur Printers. Printed at Door No.7, Lakshmi Nagar, 2nd Street, Nallampalayam Road, New Sanganoor, Rathinapuri (Po), Coimbatore – 641027. Published from 27, Vinayagar Koil Street, Krishnaswamy Nagar, Ramanathapuram, Coimbatore – 641045. Editor K.Abirami. (Note: All the litigations aur within the jurisdiction of Coimbatore courts only.)